வாராந்த சஞ்சிகை

# சுடர் ஒளி

டிசம்பர் 30 - ஜனவரி 05, 2016

பக்கம் 24

விலை 30/-




# புதிய அரசியல் ஓட்டம் தமிழருக்கு விடிவு தருமா?




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Sunlight

# ரோஜா மலர்களின்

# திருவிழா

**உங்களதும், எங்களதும் ரோஜா வாழ்த்துக்கள்**

**ஜனவரி 1ம் திகதி**

எமது வாழ்க்கை, நம்பிக்கை எனும் முடிவிலியால் தான் நிறைந்துள்ளது, அந்த நம்பிக்கையுடன், ஜனவரி 1ம் திகதி காலை 6.24 எனும் சுபநேரத்தில் ரோஜா நறுமணத்துடனான ஊதுவர்த்தி ஒன்றை ஏற்றி 2016 ஆண்டில் உங்கள் முதலாவது வாழ்த்தை மனதில் ஏற்றி ரோஜா மலர்களின் திருவிழாவுடன் இணையுங்கள்.

நீங்களும் ரோஜா மலர்களின் திருவிழாவை நேரடியாக பார்த்து மகிழ ஜனவரி 1ம் திகதி காலை 6.04 மணிக்கு தொலைகாட்சியில் நேரடி ஒளிப்பரப்பை பாருங்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய அரசியல் ஓட்டம் தமிழருக்கு விடிவு தருமா?

- வானதி



வடக்கு கிழக்கில் எத்தனை அரசியல் கட்சிகள் கால்பதித்தாலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பலத்தை உடைக்க முடியாது என்பதை நடந்து முடிந்த அனைத்துத் தேர்தல்களும் பட்டவர்த்தனமாக வெளிப்படுத்தி இருந்தன. தமிழரின் நம்பிக்கைக்குரிய கட்சியாக விளங்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை உடைப்பதற்கு கடந்த காலங்களில் எடுக்கப்பட்ட முயற்சிகள் அனைத்தும் தோல்வியிலேயே முடிந்தன. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மீது மக்கள் நம்பிக்கை இழந்து விட்டனர் என்ற மாயை கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் கலைந்தது.

வடமாகாண முதலமைச்சருக்கும் கூட்டமைப்புக்கும் இடையிலான அரசியல் முரண்பாடுகள் அண்மைக் கால தலைப்புச் செய்திகளாக மக்கள் மத்தியில் சென்றன. வடமாகாண முத லமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனுக்கும் நாடாளுமன்ற உறுப்பினர் எம் .ஏ.சுமந்திரனுக்குமிடையில் அறிக்கைப்போர் ஏதோ ஒன்று நடக்கப் போவதை உறுதி செய்தன. வடமாகாண முதலமைச்சர் தலைமையிலான புதிய அரசியல் கட்சி ஒன்று உருவாகப் போகிறது என்ற செய்திகள் அரசல் புரசலாக வெளியாகின. கூட்டமைப்பு பலவீனமாக வேண்டும் என நினைப்பவர்கள் அத்தகைய ஒரு செய்தியை எதிர்பார்த்துக் காத்திருந்தனர்.

எமக்குள் பிரச்சினைகள் ஏதுமில்லை. பேசித்தீர்ப்போம் என தலைவர் சம்பந்தன் அறிவித்தார். தமிழரசுக் கட்சிக்கும் முதல மைச்சர் சி.வி.விக்னேஸ்வரனுக்கும் இடையிலான தூரம் அதிகரித்தது. இப்பிரச்சினை சுமுகமாகத் தீர்க்கப்படும் என்றே மக்கள் நினைத்தார்கள்.

தமிழ் மக்கள் பேரவை என்ற அமைப்பு உருவாக்கப்பட்டதாக அறிந்தபின்னர் மக்களின் நினைப்பு பொய்யானது. தமிழ் மக்கள் பேரவை என்ற அமைப்பு உருவாகப் போகிறது என்ற செய்தி யாருக்குமே கசியவில்லை. இந்த அமைப்பில் அங்கம் வகிப்பதற்காக அழைக்கப்பட்டவர்கள் அனைவரும் ஒன்று கூடி தமிழ் மக்கள் பேரவை அமைக்கப்பட்டதாக அறிவித்தார்கள்.

முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், மருத்துவர் பி.லக்ஷ்மன், மட்டக்களப்பு சிவில் சமூக செயலாளர் ரி.வசந்தராஜா ஆகியோர் தமிழ் மக்கள் பேரவையின் இணைத்தலைவர்களாக தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இது அரசியல் கட்சியல்ல தமிழ் மக்களின் ஜனநாயக உரிமைகளை பெற்றுத்தருவதற்கான அமைப்பு என்று விளக்கம் கொடுக்கப்பட்டுள்ளது.

இது அரசியல் கட்சியல்ல என்பதை நிலைநிறுத்துவதற்காக பல விளக்கங்களைக் கொடுத்துள்ளனர். தமிழரசுக்கட்சியின் உபதலைவர் சி.க.சிற்றம்பலம், புளொட் அமைப்பைச்சேர்ந்த க.சிவனேசன், அரசியல் கட்சித் தலைவர்கள், சமயத் தலைவர்கள்,சிவில் சமூகப் பிரதிநிதிகள் இப் பேரவையில் அங்கத்தவர்களாக உள்ளனர்.எனினும்,தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை கடுமையாக எதிர்ப்பவர்கள் இதன் பின்னணியில் பலமாக இருக்கின்றனர். கூட்டமைப்பை மிக மூர்க்கமாக எதிர்க்கும் தமிழ் தேசிய மக்கள் முன்னணியுடன்,சுரேஷ் பிரேமச்சந்திரன் கைகோர்த்துள்ளார்.

தமிழ் மக்கள் பேரவை அரசியல் கட்சி அல்ல என்று அமைப்பாளர்கள் கூறினாலும், பிரேமசந்திரனும் கஜேந்திரகுமாரும் ஒன்றானதால் இதுஅரசியல் கட்சியாக இருக்கலாம் என்ற சந்தேகமே மேலெழுந்து நிற்கிறது. சுரேஷ் பிரேமச்சந்திரன் நாடாளுமன்றத் தேர்தலில் தோல்வியடைந்த பின்னர் கூட்டமைப்பின் சகல நடவடிக்கைகளையும் கண்டித்து அறிக்கை விட்டு தனது இருப்பை வெளிக்காட்டுகிறார். கூட்டமைப்பை எதிர்க்கும் பலமான ஒருவர் கஜேந்திரகுமாருடன் இணைந்துள்ளார். நாடாளுமன்றத் தேர்தலில் தோல்வியடைந்தவர்கள் ஓரணியில் திரண்டுள்ளார்கள் என பேரவைக்கு எதிரானவர்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

கூட்டமைப்பில் உள்ள தமிழரசுக் கட்சிக்கும் [illegible] அழைப்பு விடுக்கப்படவில்லை. புதிய அமைப்பின் முக்கியஸ்தர்களுக்கு வேண்டப்படாத கூட்டமைப்பு உறுப்பினர்களும் உள்வாங்கப்படவில்லை. ஆனந்த சங்கரி வழமைபோல ஓரம் கட்டப்பட்டுள்ளார். மேலோட்டமாகப் பார்க்கும் போது, ஒரு சில முரண்பாடுகள் பட்டவர்த்தனமாகத் தெரிகின்றன. கீரைக் கடைக்கும் எதிர்க்கடை தேவைதான். கூட்டமைப்பு விடும் தவறுகளை நாசூக்காக தட்டிக் கேட்க வேண்டும். கூட்டமைப்பின் தவறுகள் சில மிகைப் படுத்தப்படுகின்றன.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் அரசியல் பயணம் கரடு முரடு நிறைந்ததாக உள்ளது. 'தமிழ் மக்களின் உரிமைகளைப் பற்றிப் பேசினால் சிங்கள கடும்போக்காளர்கள் கொந்தளிக்கின்றனர். சிங்களத் தலைவர்களுடன் இணக்கமாகச் செயற்பட்டால் இதற்காகவா உங்களை நாடாளுமன்றத்துக்கு அனுபினோம் என்ற கண்டனக் கணைகள் தமிழர் தரப்பில் இருந்து வெளிவருகின்றன. தம் மீதான விமர்சனங்களுக்கு உடனுக்குடன் பதிலளிப்பதற்கு கூட்டமைப்பு உறுப்பினர்கள் தயங்கு கின்றனர். சிலவேளை அவர்கள் கொடுக்கும் பதில்களுக்கு உரிய முக்கியத்துவம் கொடுக்கப்படுவதில்லை. சமூகவலைத்தள விமர்சனங்கள் சில ஒருதலைப்பட்சமாக உள்ளன. இந்த நிலையில் தமிழ் மக்கள் பேரவையின் உருவாக்கம், கூட்டமைப்புக்கு சவாலைக் கொடுக்கும் என்பதில் சந்தேக மில்லை.

> **“ தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் அரசியல் பயணம் கரடு முரடு நிறைந்ததாக உள்ளது. தமிழ் மக்களின் உரிமைகளைப் பற்றிப் பேசினால் சிங்கள கடும்போகாளர்கள் கொந்தளிக்கின்றனர். சிங்களத் தலைவர்களுடன் இணக்கமாகச் செயற்பட்டால் இதற்காகவா உங்களை நாடாளுமன்றத்துக்கு அனுபினோம் என்ற கண்டனக் கணைகள் தமிழர் தரப்பில் இருந்து வெளிவருகின்றன. தம் மீதான விமர்சனங்களுக்கு உடனுக்குடன் பதிலளிப்பதற்கு கூட்டமைப்பு உறுப்பினர்கள் தயங்குகின்றனர். சிலவேளை அவர்கள் கொடுக்கும் பதில்களுக்கு உரிய முக்கியத்துவம் கொடுக்கப்படுவதில்லை. சமூகவலைத்தள விமர்சனங்கள் சில ஒருதலைப்பட்சமாக உள்ளன. இந்த நிலையில் தமிழ் மக்கள் பேரவையின் உருவாக்கம், கூட்டமைப்புக்கு சவாலைக்கொடுக்கும் என்பதில் சந்தேகமில்லை. ”**

தமிழ் மக்களின் ஜனநாயக உரிமை,அரசியலமைப்பு என்பனபற்றி கவனம் செலுத்தப் போவதாக தமிழ் மக்கள் பேரவை வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இணைத் தலைவர்கள் மூவர் உள்ளனர். அவர்களில் எவரும் தமது கொள்கை கோட்பாடு பற்றி வாய் திறக்கவில்லை. அமைப்பு விடுத்த அறிக்கைதான் ஊடகங்கள் வாயிலாக மக்களுக்கு கிடைத்தது. இவர்களு டைய அடுத்த செயற் பாடு என்ன, எதை நோக்கி இந்த அமைப்பு செயற்படப்போகிறது என்பது பற்றிய தெளிவு இல்லை. அதனால், அடுத்த அறிக்கை எப்போது வெளிவரும் என மக்கள் எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றனர்.

இடம்பெயர்ந்த மக்களின் அவலம், பெண் தலைமைத்துவ குடும்பங்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், கைதுசெயப்பட்டு விடுதலையானவர்களின் வாழ்வாதாரம், உயர் பாதுகாப்பு வலயம், அகதி முகாம் வாழ்க்கை, காணாமற்போனவர் களின் குடும்பத்தவர்களின் எதிர்பார்ப்பு, அரசியல் கைதிகள் விவகாரம் என்பன இன்னமும் தீர்க்கப்படாதவையாக உள்ளன. தமிழ் மக்கள் பேரவை இவற்றில் கவனம் எடுக்குமா என்பதை வெளிப்படுத்தவில்லை.

அரசியல் கட்சி உறுப்பினர்கள் கட்சித் தலைமையின் அனுமதி இன்றி பேரவையில் அங்கம் வகிப்பது சிக்கலை உண்டாக்கும். கட்சியின் கொள்கைக்கு விரோதமாக பேரவையின் செயற்பாடு அமைந்தால், கட்சித் தலைமை தட்டிக் கேட்கும். பேரவையில் உள்ள எவருக்கும் அவர் சார்ந்த கட்சி அத்தகைய கடிதம் எதனையும் அனுப்பவில்லை. இது அக்கட்சியின் பலவீனமா அல்லது மெத்தனப் போக்கா எனத் தெரியவரவில்லை.

2016 ஆம் ஆண்டு தமிழ் மக்களின் பிரச்சினைக்கு தீர்வு காணப் பட்டுவிடும் என சம்பந்தன் கூறியுள்ளார். புதிய அரசியலமைப்பை உருவாக்க பிரதமர் ரணில் முயற்சி செய்கிறார். தமிழ் மக்களின் கருத்தைக் கேட்டறிந்து புதிய அரசியல் தீர்வுத் திட்டம் வரையப்பட்டு தமது தலைமையினால் முன்வைக்கப்படும் என தமிழ் மக்கள் பேரவை அறிவித்துள்ளது.

தமிழ் அரசியல் தலைவர்கள் அனைவரும் ஓரணியில் நின்று, நிரந்தர அரசியல் தீர்வைப் பெற்றுத் தர வேண்டும் என்பதே தமிழ் மக்களின் விருப்பமும் வேணவாவும். அது சாத்தியமானால் மட்டுமே, தமிழ் மக்களின் அரசியல் விடிவை நோக்கி நடக்க இயலும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தாதா தாவூத் இப்ராஹிம்

சண். சரவணக்குமார்

வீட்டில் தனது மனைவியுடன் இருந்த முகமதுவை, 'தாவூத் அழைக்கிறார்' என்று தாவூத்தின் ஆட்கள் நள்ளிரவில் வந்து அழைத்தனர்.

'இரவு நேரம் என்பதால் இப்பொழுது வரமுடியாது, காலை வருகிறேன்' என்று சொன்னார் முகமது. 'உன் மீது பயங்கர கோபத்தில் இருக்கிறார் தாவூத். நீ இப்பொழுது வரவில்லை என்றால், அவர் இங்கு வருவார். உனக்கு புது மனைவி இருக்கிறார். அவருக்கு வயது குறைவு, அழகு தாராளம்' என்று மிரட்டினார்கள்.

வேறு வழியின்றி அவர்களுடன் சென்றார் முகமது. முகமதுவின் காரில் அவர் காரை ஓட்டிச்செல்ல, அவருடன் இரண்டு நபர்கள் ஏறிக்கொண்டனர். என்ன நடக்கப்போகிறது என்கிற விபரம் ஏதும் தெரியாமல் இருந்தார் முகமதுவின் 22 வயதான மனைவி சஹீதா.

கார், நகர்ப்புறத்தின் ஒரு பெற்றோல் நிலையத்தில் நின்றது. அங்கிருந்து இறங்கி தப்பி ஓட நினைத்த முகமது இக்பாலை தாவூத்தின் நண்பர்கள் ஆயூப்பும், சையதுவும் ஓங்கி எட்டி உதைத்தனர். அதை சற்றும் எதிர்பாராத முகமது கீழே விழவும், மாறி மாறி கொடுமையான ஆயுதங்களால் தாக்கினார்கள். ரத்த வெள்ளத்தில் நிலைகுலைந்து போனார் முகமது.

'இந்த கைதானே எழுதுகிறது...?' என்று கேட்டபடியே முகமதுவின் வலது கையை பிடித்து கரும்பை உடைப்பது போல உடைத்தான் சையது. 'உன்னால் எங்களுக்கு தொழில் நஷ்டம், நண்பர்கள் பொலிஸின் துப்பாக்கிக்கு பலி..!' என்று சொல்லிக்கொண்டே முகத்தில் தனது ஷூ காலால் மிதித்தான் ஆயூப்.

மிருகம் வேட்டையாடுவது போல வேட்டையாடினார்கள் முகமதுவை. தட்டிக்கேட்கவும், தடுக்கவும் யாருமில்லை. உடம்பெல்லாம் ரத்தம் பீறிட்டுக்கொண்டு வந்தததும் மயங்கி சரிந்தார் முகமது. அதோடு இறந்து விட்டான் என்று நினைத்து, மாஹிம் பகுதியை ஒட்டியுள்ள ஒரு ஒதுக்கு புறமான இடத்தில் காரில் வைத்து தூக்கி வீசி எறிந்து விட்டு, முகமதுவின் முகத்தில் சிறுநீரை கழித்து விட்டு சென்றனர். நள்ளிரவில் நடந்த சம்பவம் யாருக்கும் தெரியாமல் போனது. மறுநாள் நண்பகலில் முகமது கண்விழித்த பொழுது உடம்பெல்லாம் வலி. அதோடு ஈயும் எறும்பும் ஒட்டிக்கொண்டு தொந்தரவு செய்வதை கூட தடுக்க முடியாத நிலைமையில் இருந்தார். அந்த நேரம் பார்த்து அந்தப் பக்கம் வந்த வழிப்போக்கன் ஒருவன், முகமதுவை பார்த்துவிட்டு அந்தப் பகுதியில் இருந்த ஒரு காவலரை அழைத்து வந்தான்.

உடனடியாக முகமதுவை மீட்டு ஜெஜெ மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். நடந்த சம்பவங்களை பொலிஸ் அதிகாரிகளிடம் வாக்கு மூலமாக சொன்னார். இரண்டு நாட்கள் கழித்து சிகிச்சை பலனின்றி இறந்துபோனார் முகமது இக்பால்.

இந்த சம்பவம் மும்பையை உலுக்கியது. பத்திரிகையாளர்கள் மத்தியில் பெரும் சோகமும், கோபமும் உண்டானது. இந்த சம்பவத்தை சாதாரணமாக விடக்கூடாது என்று சம்பவத்துக்கு காரணமான தாவூத்தினை கட்டம் கட்டி எழுதினார்கள். இந்த சம்பவத்தினால் இந்தியா முழுவதும் பிரபலமானான் தாவூத்.

பத்திரிகையாளர் இக்பால் கொலையை அடுத்து பொலிஸ் வட்டாரம் தாவூத் இப்ராஹிமின் தலைக்கு குறி வைக்கிறது. தாவூத்தின் கூட்டாளிகள் ஆயூப், சையது உள்பட அவனுடன் இருந்த எல்லோரும் தலைமறைவு வாழ்க்கையை தேர்ந்தெடுத்து, பல்வேறு இடங்களில் தஞ்சம் புகுந்தனர். ஆடின காலும், பாடின வாயும் சும்மா இருக்காது என்பதால் எங்கு சென்றாலும் வழக்கம் போல அவர்களின் கடத்தல் தொழில்களை விடுவதாக இல்லை.



பகல் பொழுதுகளில் நன்றாக குடிப்பது, சீட்டு விளையாடுவது என அவர்களுக்கு பிடித்த விஷயங்களை செய்து வந்ததனர். பகலெல்லாம் அலுவலகம், வேலை என்று உழைத்து களைத்துப்போய் தூங்கும் சாமானியர்கள் போல இல்லாமல் இரவில்தான் 'தாவூத் அண்ட் கோ'விற்கு வேலையே ஆரம்பிக்கும். கடத்தல் தொழில் செய்யும் பொழுது ஒரு சில நேர்மையான அதிகாரிகள் கண்டிப்புடன் நடந்து கொள்வார்கள். அவர்களால் பல லட்சங்கள் மதிப்புள்ள கடத்தல் பொருள்கள் பறிமுதல் செய்யப்பட்டு, நடவடிக்கை எடுக்கப்பட்டதால் கடும் அதிருப்தியில் இருந்தார்கள். அவர்களை மடக்கவே புதிய திட்டங்களை தீட்டினான் தாவூத்.

மும்பை 1970களில் பெரும் நகரமாக இருந்தது. அங்கு துறைமுகம் இருந்ததால் அதனை மையமாக வைத்து வடக்கு மும்பை, தெற்கு மும்பை என்று நான்கிற்கும் மேற்பட்ட பகுதிகளாக மும்பையை கூறு போட்டு வைத்து அவர்களுக்கு ஏதுவான தொழில்களை செய்து வந்தனர் மும்பையில் இருந்த ஃமாபியாக்கள். ஒவ்வொரு கூட்டத்திற்கும் ஒரு டான் இருந்தான். சிறு, சிறு குழுக்களாக இயங்கி வந்தனர். அவர்களுக்குள் கடும் தொழில் போட்டிகள் இருந்து வந்ததால் சில சமயங்களில் அரசு அதிகாரிகளுக்கு போட்டு கொடுப்பதும் நடப்பதுண்டு. அது அவர்களுக்குள் பெரும் பகையை உண்டாக்கி, மார்க்கெட் போன்ற பொதுவான இடங்களில் அவர்கள் சந்திக்க நேரும் பொழுது மோதிக்கொள்வது உண்டு. மோதினால் எப்படியும் குறைந்த பட்சம் ஒரு கொலையாவது விழும். பொது மக்களுக்கு இந்த மாதிரி சம்பவங்களால் பெரும் அச்சமும், பயமும் உண்டானது. ஆனால் பொலிஸ்காரர்களுக்கு இது போன்ற சம்பவம் நடந்தது என்றால் கொண்டாட்டம்தான். இது போன்ற செயல்களில் ரவுடிகள் அழிகிறார்கள் என்று அவர்களுக்குள் பேசிக்கொள்வார்கள்.

மும்பையில் அன்று முதல் இன்று வரை சாராய வியாபாரம் கொடிகட்டி பறப்பது யதார்த்தமான ஒன்று. அன்றைய மகராஷ்ட்ரா அரசு மதுவை தடை செய்து இருந்தது. அதனால் மதுவிற்கு கடும் கிராக்கி இருந்து வந்தது. வடக்கு மும்பையை ஒட்டிய பகுதிகளில் சாராயத்தை காய்ச்சி, அதனை லாரி டியூப்களில் கடத்தி வருவது வழக்கம். சாராயம் சின்ன விஷயம் என்றாலும், அதன் மூலம்தான் அதிகபட்சமான நேரடி வருமானம் மும்பை மாஃபியாக்களுக்கு வந்தது . இதனால், மும்பையில் கள்ளச் சாராயம் முதல் உயர் ரக மது வரை அவர்களின் தகுதிக்கு ஏற்ப கடத்தி அதை தொழில் செய்து வந்தனர். இதுபோன்ற தொழிலில் ஆரம்பித்து பிறகு எல்லா முன்னணி கள்ளக்கடத்தல் தொழிலையும் செய்து வந்தவன் பாசு தாதா என்பவன். இவனிடம் வேலை பார்த்து இவனுக்கு எல்லாமாக இருந்து வந்தவன் காலித் பயில்வான். பல்வேறு வழக்குகள் பிரச்சினையில் பாசு தாதா சிக்கிக்கொண்டதால், அவனுக்குப் பிறகு காலித் பயில்வான் தனியாகத் தொழில் செய்து வளர்ந்து வந்தான். அவனுக்கு ஒரு குறிப்பிட்ட தொகைக்கு ஈடான வெள்ளிக்கட்டிகள் ஒரு பகுதியில் இருந்தது. அதனை வெளியே எடுக்க முடியாமல் திணறி வந்தான். அப்பொழுது தாவூத்தின் உதவியை நாடியதும், அவனுக்கு தாவூத் உதவி செய்தான்.

(தோட்டக்கள் பாயும்)

**மிருகம் வேட்டையாடுவது போல வேட்டையாடினார்கள் முகமதுவை. தட்டிக்கேட்கவும், தடுக்கவும் யாருமில்லை. உடம்பெல்லாம் ரத்தம் பீறிட்டுக்கொண்டு வந்தததும் மயங்கி சரிந்தார் முகமது. அதோடு இறந்து விட்டான் என்று நினைத்து, மாஹிம் பகுதியை ஒட்டியுள்ள ஒரு ஒதுக்கு புறமான இடத்தில் காரில் வைத்து தூக்கி வீசி எறிந்து விட்டு, முகமதுவின் முகத்தில் சிறுநீரை கழித்து விட்டு சென்றனர். நள்ளிரவில் நடந்த சம்பவம் யாருக்கும் தெரியாமல் போனது. மறுநாள் நண்பகலில் முகமது கண்விழித்த பொழுது உடம்பெல்லாம் வலி. அதோடு ஈயும் எறும்பும் ஒட்டிக்கொண்டு தொந்தரவு செய்வதை கூட தடுக்க முடியாத நிலைமையில் இருந்தார்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தாலாட்டைக் கேட்டு உறங்கும் யானைக்குட்டி!

**தா**ய்லாந்திலுள்ள மூன்று வாரக் குழந்தை (யானைக்குட்டி) அவளது நெருங்கிய தோழியான அலய்யின் மடியில் படுத்து, அவள் பாடும் தாலாட்டைக் கேட்டுக்கொண்டே உறங்குகின்றது. வாழ்வாதாரமின்றி தவித்த இந்த யானைக்குட்டியின் குடும்பத்தை தற்போதைக்கு தாய்லாந்தின் சாய் லாய் ஆர்க்கிட் என்னும் வன விலங்குகள் பாதுகாப்பு அமைப்பு பாதுகாத்து வருகின்றது.



# ரோபோ அறிவிப்பாளர்

**சீ**ன செய்தி அலைவரிசையான 'ஷாங்காய் ட்ராகன்' டிவி செயற்கை நுண்ணறிவு கொண்ட ரோபோவை வானிலை அறிவிப்பாளராக நியமித்துள்ளது.

காலை நேரச் செய்திப் பதிப்பின்போது திடீரென்று ரிவியில் தோன்றிய ரோபோ, குளிர்காலப் பருவத்தில் என் புதிய வேலை தொடங்குவதில் நாம் மிகவும் சந்தோஷமாக இருக்கிறேன் என்று குறிப்பிட்டது.

இந்த ரோபோவுக்கு 'ஜியோஜஎஸ்' என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது. 'ஸ்மார்ட் கிளவுட்' மற்றும் 'பிக் டேட்டா' உதவியோடு மைக்ரோசாஃப்ட் நிறுவனம் இந்த ரோபோவை தயாரித்துள்ளது.

சீன செய்தி நிறுவனத்தில் பணியில் உள்ள ரோபோவின் குரல் அனைவரையும் கவர்ந்துள்ளது. அதன் வார்த்தை உச்சரிப்பு மற்றும் செய்தியை வெளியிடும் விதம் பார்ப்பவரை கவர வைத்துள்ளது.



# கிணற்றில் வசிக்கும் தம்பதி

**சீ**னாவின் ஹெனான் மாகாணத்தைச் சேர்ந்த வயோதிப தம்பதியொன்று வீட்டு வாடகை செலுத்துவதைத் தவிர்க்க கடந்த 10 வருட காலமாக கிணறொன்றில் வாழ்ந்துவருவது தொடர்பான தகவல் வெளியாகியுள்ளது.

கிழக்கு சீனாவில் ஹெனான் மகாணத்தில் 'ஸென்ஸொயு' எனும் இடத்தைச் சேர்ந்த 'மா புலேயி' என்ற மேற்படி கணவரும் அவரது மனைவியும் 10 வருடங்களுக்கு முன்னர் 16 அடி ஆழமான அந்தக் கிணற்றில் வசிக்க முடிவெடுத்தனர்.

அந்தத் தம்பதி அந்த கிணற்றில் குடிவருவதற்கு முன்னர் அது



பாடசாலையொன்றால் மின்சக்திப் பிறப்பாக்கியை வைப்பதற்கான அறையாக பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது.

வீட்டு வாடகை செலுத்துவதைத் தவிர்க்க 10 வருட காலமாக கிணற்றில் வசிக்கும் தம்பதி அந்த கிணற்றின் 538 சதுர அடி அளவான பரப்பளவைக் கொண்ட அடித் தளமானது தொலைக்காட்சிப்பெட்டி, குளிர்சாதனப்பெட்டி, குளிரூட்டி, சலவை இயந்திரம், தண்ணீர்த் தாங்கிகள் மற்றும் தளபாடங்கள் என்பனவற்றை உள்ளடக்கி ஒரு முழுமையான வீடாக காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

மேற்படி கிணற்று வீட்டில் தனித்து வாழும் அந்தத் தம்பதியை அவர்களது பிள்ளைகள் அவ்வப்போது வந்து பார்த்து வருகின்றனர்.

வீட்டு வாடகை செலுத்துவதைத் தவிர்க்க 10 வருட காலமாக கிணற்றில் வசிக்கும் தம்பதி அந்த வீட்டிற்கு செல்வதற்கென அந்தக் கிணற்றின் உட்புறச் சுவரில் ஏணிகள் மற்றும் படிகள் போன்ற கட்டமைப்புகள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன.

மா புலேயி பொறியியல் திணைக்களத்தில் நிலத்திற்குக் கீழான பராமரிப்பு பணியில் பணியாற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

ஆரம்பத்தில் மா புலேயிக்கும் அவரது மனைவிக்கும் அந்தக் கிணற்றில் தற்காலிகமாக தங்கிக் கொள்ளவே அனுமதி வழங்க உத்தேசிக்கப்பட்டிருந்ததாக ஸென் ஸொயு பிராந்திய அதிகாரியொருவர் தெரிவித்தார்.



# ஆண் துணையின்றி குஞ்சு பொறிக்கும் அதிசய மீன்கள்

**அ**மெரிக்காவின் புளோரிடா மாகாணத் தில்,ஆண் துணையின்றி தாமாகவே குஞ்சு பொரித்த பெண் மீன்களை கண்டுபிடித்திருப்ப தாக,அமெரிக்க விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

பெரும்பாலும்,மீன் தொட்டிகளில் வளர்க்கப்படும் மீன்கள். இவ்வாறான வித்தியாசமான முறையில் குஞ்சு பொரிப்பதை பார்த்ததாக சொல்லும் விஞ்ஞானிகள்,இயற்கை நீர் நிலைகளில் உள்ள மீன்கள் இவ்வாறு குஞ்சு பொரித்ததை பார்த்ததில்லை என கூறியுள்ளனர்.

சா பிஷ் என ஆங்கிலத்தில் அழைக்கப்படும் வாள் சுறா, வாள் மீன், கோலா மீன் என்றும் பல பெயர்களால் அழைக்கப்படும் மீன்வகையைச் சேர்ந்த ஏழு பெண்மீன் களை விஞ்ஞானிகள் பரிசோதித்தபோது. அவற்றுக்கு தந்தை மீன்கள் இருந்ததற்கான எந்த மரபணு சான்றுகளும் இருக்கவில்லை என தெரிவித்தனர்.

இந்த ஏழு பெண் மீன்களுமே கருவுறாத பெண் மீன்களின் முட்டையில் இருந்து உருவான கருவில் இருந்து பிறந்த மீன்கள் என்பதை விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர்.

Current Biology என்கிற விஞ்ஞான சஞ்சிகையில் வெளியிடப்பட்டிருக்கும் இந்த ஆய்வின் முடிவுகளின்படி, ஒரு உயிரினத்தின் எண்ணிக்கை குறையும்போது இயற்கையாகவே இத்தகைய கருவுறா முட்டைகளே குஞ்சுகளை பொரிக்கும் நிகழ்வுகள் நடக்கக்கூடும் என்கிற சாத்தியத்தை இது உணர்த்துவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுடர் ஒளி
வாராந்த சஞ்சிகை
sudarolijaffna@gmail.com
361, கஸ்தூரியார் வீதி,யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 021 492 7419

## மாணவர் இலவசச் சீருடை; குளறுபடிக்கு இடம் வேண்டாம்

மாணவர்களுக்கு சீருடைகளை இலவசமாக வழங்கும் அரசின் திட்டம், பெற்றோர்களால் பெரிதும் வரவேற்கப்பட்ட, பாராட்டப்பட்ட ஒன்று. ஆனால் அதனைப் பெறுவதற்கு 'வவுச்சர்' வழங்கும் செயற்பாடு ஒரு விவகாரமாக மாறி, இப்போது சூடு பிடித்துள்ளது.

தரமான சீருடை வழங்குவதாகக் கூறி, மாணவர்களிடம் இருந்து வர்த்தகர்கள் ஒரு சாராரால் மேலதிக பணம் அறவிடப்படுவதாகக் கண்டறியப்பட்டுள்ளது.

அதற்கு உதாரணமாக, வவுனியா தெற்கு கல்வி வலயத்தில், இது குறித்து பெரும் விவகாரமே எழுந்துள்ளது.

பாடசாலைகளினால் வழங்கப்பட்ட வவுச்சரில் குறிப்பிட்ட தொகைக்கு மேலதிக பணம் அறவிடப்பட்டதான முறைப்பாடுகளை அடுத்து, அந்த வலயத்தின் கல்விப் பணிப்பாளர் அதனைத் தடை செய்துள்ளார்.

ஏனைய சில மாவட்டங்களில் சீருடைத் துணிகள் தரம் குறைந்தனவாகவும் அவற்றின் அளவுகளில் முறைகேடுகள் இடம்பெறுவதாகவும் பெற்றோர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

சில கடைகளில் மேலதிகமாக இருநூறு ரூபா முதல் முன்நூறு ரூபா வரை அறவிடப்படுவதாகவும் --

அதேபோன்று, சில கடைகளில் துணி தரம் மிகுந்தது; அளவு அதிகமானது என்று தெரிவித்து மேலதிக பணம் பெறப்படுவதாகவும் -- புகார்கள் எழுந்துள்ளன.

இதேவேளை, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் பதவி வகிக்கும் வரை 'வவுச்சர்' முறையே தொடரும் என்றும் கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவாசம் அறிவித்திருக்கிறார்.

சீருடைகளைப் பெறுவதற்காக மாணவர்களுக்கு வழங்கப்படும் 'வவுச்சர்' முறையில் உள்ள குறைபாடுகள் அடுத்த ஆண்டில் நிவர்த்தி செய்யப்படும் என்று அவர் அறிவித்திருப்பதும் குறிப்பிடத்தக்க தாகும்.

ஏழ்மை கல்விக்குத் தடை இல்லை என்பது எங்கள் நாட்டில் எழுபது ஆண்டுகளுக்கு முன்னரே நடைமுறைக்கு வந்தமையாலேயே, பெரும் பண வசதி படைத்தோருக்கு நிகராக வறுமை நிலையில் வாழ்ந்தவர்களும் கல்வி அறிவு பெறும் வாய்ப்பு ஏற்பட்டது. இலவசக் கல்வி அதற்கு அத்திபாரம் இட்டு ஏழு தசாப்தங்கள் கடந்தேறிவிட்டன.

மாணவர்களுக்கு சீருடை வழங்கும் அரசின் திட்டம் இலவசக் கல்வியை மேலும் மேன்மைப்படுத்தி உள்ளது. வறுமைக் கோட்டின் கீழ் உள்ள சிறுவர்கள், மாணவர்கள், ஏனையோர் முன் கூனிக் குறுகாமல், சம கல்வி வாய்ப்பைப் பெற்றிருப்பது ஒரு வரப் பிரசாதம்.

இலவச சீருடை வழங்கும் திட்டம் கோணிக் குலையாது இருப்பதற்கு, ஆட்சிக்கட்டிலில் ஏறும் அரசுகள், அதன் பிரதானிகள் மனதார்ந்து உழைக்க வேண்டும்.

'எண்ணும் எழுத்தும் கண் எனத் தகும்' என்ற வேதவாக்கை எப்போதும் மேலுயர்த்த வேண்டியது ஆட்சிக் கட்டிலில் ஏறும் அரசுகளின், அதன் தலைவர்களின் பெரும் பொறுப்பு. தேர்தலில் வென்றதும் அதனை வசதியாக மறந்துவிடலாகாது.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தனது ஜனாதிபதிப் பதவி பறிபோன பின்பும் கூட ஓய வில்லை. ஒவ்வொரு விகாரையாகப் பயணம் செய்து பரப்புரைகளை மேற்கொண்டு வருகிறார். அவரின் பரப்புரைகள் பிரதானமாக பச்சை

சென்று பிரகீத் எக்கனகொட கொலை தொடர்பாகக் கைது செய்யப்பட்டு தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ள இராணுவ அதிகாரிகளைச் சந்தித்தார். அச்சந்திப்பின் பின்பு அவர் ஊடகவியலாளர்களிடம் தான் அரசியல் கைதிகளைப் பார்வையிட்டு வருவதாகத்

# விகாரைகளிலிருந்து சிறைச்சாலை வரை

இனவாதமாகவும், சிங்கள மக்களை விடுதலைப்புலிகள் மீண்டும் வரப்போகிறார்கள் என அச்சுறுத்தும்

தெரிவித்தார்.

விடுதலைப்புலிகளுக்கு உதவி



வகையிலேயே அமைந்துள்ளன. அதற்கேற்ற வாய்ப்புக்களை அரசாங்கம் மேற்கொள்கிறது எனக்கூறி அரசுக்கு எதிரான கருத்துக்களை மக்களிடம் விதைத்து வருகிறார்.

வழங்கியவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் தடுத்து வைக்கப்பட்டிருப்பவர்கள் அரசியல் கைதிகள் அல்ல எனவும் கொலை கொள்ளைகளில் ஈடுபட்ட குற்றவாளிகள் எனவும் கூறி வந்த அவர் ஒரு ஊடகவியலாளர்கள் கொலை சம்பந்தமாக கைது

**தமிழ் அரசியல் கைதிகள் தமது விடுதலை கோரிப் போராடடங்களை நடத்தி வருகின்றனர். பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் அவர்களை விசாரணையின்றித் தடுத்து வைத்திருப்பது சர்வதேச அளவில் கூட கண்டனத் துக்கு உட்பட்டு வருகிறது. எனவே அரசாங்கம் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் தமிழ் அரசியல் கைதிகளை விடுவிக்க வேண்டிய நிர்ப்பந்தம் உண்டு. எனவே கண் துடைப்புக்காகவாவது சில நடவடிக்கை எடுக்க வேண்டி வரும்.**

தற்சமயம் பயணநிகழ்ச்சி நிரலில் சிறைச்சாலைகளும் சேர்க்கப்பட்டு விட்டன. அண்மையில் அவர் வெலிக்கடைச் சிறைச்சாலைக்குச்

செய்யப்பட்டவர்களை அரசியல் கைதிகள் என வர்ணித்துள்ளார். அது மட்டுமன்றி பிரகீத் எக்னலிகொடாவை ஒரு நாடாளுமன்ற உறுப்பினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டதாகவும், அதனால் அவர் இருக்கிறாரா இல்லையா எனச் சொல்ல முடியாது எனவும் அவர் தெரிவித்தார்.

ஏற்கனவே அந்த நாடாளுமன்ற உறுப்பினர் தான் கூறியது தவறு என நீதிமன்றத்திலேயே ஒப்புக் கொண்ட பின்பும் அதே கூற்றை மஹிந்த ராஜபக்ஷ குறிப்பிடுகிறார் என்றால் அவர் பொய்யை உண்மையாக்கு வதில் எவ்வளவு தீவிர அக்கறை காட்டி வருகிறார் என்பதை நாம் புரிந்து கொள்ள முடியும். மேலும் விசாரணையாளர்கள் கோத்தபாய ராஜபக்ஷ சொல்லித்தான் கொலை செய்தனர் என கூறும்படி சந்தேக நபர்களிடம் வலியுறுத்தியதாகவும் தெரிவித்துள்ளார்.



அவரின் கூற்றுப்படி கைது செய்து தடுத்து வைக்கப்பட்ட நபர்கள் நிரபராதிகள் என்பதும், முன்னாள் பாதுகாப்புச் செயலரைக் குற்றவாளி யாக்க பிரகீத் கொலை பயன்படுத்தப் படுகிறது என்பதுமே வெளிப்படுத்தப் படுகிறது. எனவே அவர்கள் கொலைகாரர்களல்ல. அரசியல் காரணங்களுக்காகக் கைது செய்யப்பட்டவர்கள் என சிங்கள மக்களை நம்ப வைக்கும் முயற்சிகளை மேற்கொண்டுள்ளார்.

தமிழ் அரசியல் கைதிகள் தமது விடுதலை கோரிப் போராட்டங்களை நடத்தி வருகின்றனர். பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் அவர்களை விசாரணையின்றித் தடுத்து வைத்திருப்பது சர்வதேச அளவில் கூட கண்டனத்துக்கு உட்பட்டு வருகிறது. எனவே அரசாங்கம் விரும்பினாலும் விரும்பா விட்டாலும் தமிழ் அரசியல் கைதிகளை விடுவிக்க வேண்டிய நிர்ப்பந்தம் உண்டு. எனவே கண்துடைப்புக்காக வாவது சில நடவடிக்கைகளை எடுக்க வேண்டி வரும்.

அப்படி ஒரு சிலர் விடுவிக்கப்பட்டால் தமிழ் அரசியல் கைதிகள் விடுவிக்கப்படுகிறார்கள். நாட்டைக் காப்பாற்றிய இராணுவச்தைச் சேர்ந்த சிங்க அரசியல் கைதிகளை விடுதலை செய்யவில்லை எனச் சிங்கள மக்கள் மத்தியில் பிரசாரம் செய்ய இப்போதே அத்திவாரம் இடப்படுகிறது. இதற்காகவே விமல்வீரவன்ச, தினேஷ் குணவர்த்தன போன்றோர் தயார் நிலையில் உள்ளனர்.

கொலை, ஆட்கடத்தல், மோசடி, அதிகார முறைகேடுகள் பலவிதமான குற்றச்சாட்டுக்களால் கடந்த அரசாங்கத்தின் அதிகார பீடத்திலிருந்த பலர் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்ற னர். இவர்களில் சிலர் தடுப்புக் காவலில் வைக்கப்படும் நிலையும் ஏற்பட்டது.

இவற்றிலிருந்து சிங்கள மக்களின் கவனத்தை திசை திருப்ப மஹிந்த குழுவினர் படுகீழ்த்தரமான இனவாதத் தைக் கையில் எடுத்து சிங்கள மக்கள் மத்தியில் புலிப்பூச் சாண்டி காட்டி வருகின்றனர். புலம்பெயர் புலி ஆதரவாளர் களின் விருப்பங்களை நிறைவேற்றவே தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்து வடக்கிலிருந்து இராணுவத்தை வெளியேற்றி வருவதுடன் அரசாங்கம் பயங்கரவாதத் தடைச்சட்டத்தையும் நீக்கிவிடப் போகிறது எனவும் அவர் தீவிரப் பிரச்சாரத்தில் ஈடுபட்டு வருகிறார்.

ஆனால் உண்மையில் எவ்வளவு சர்வதேச அழுத்தங்கள் இருந்த போதும் புதிய அரசாங்கமும் கூட மீள்குடியேற் றம், வடக்கில்

**சிங்கள மக்களின் கவனத்தை திசை திருப்ப மஹிந்த குழுவினர் படுகீழ்த்தரமான இனவாதத் தைக் கையில் எடுத்து சிங்கள மக்கள் மத்தியில் புலிப்பூச் சாண்டி காட்டி வருகின்றனர். புலம்பெயர் புலி ஆதரவாளர் களின் விருப்பங்களை நிறைவேற் றவே தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்து வடக்கிலிருந்து இராணுவத்தை வெளியேற்றி வருவதுடன் அரசாங்கம் பயங்கரவாதத் தடைச்சட் டத்தையும் நீக்கிவிடப் போகிறது எனவும் அவர் தீவிரப் பிரச்சாரத்தில் ஈடுபட்டு வருகிறார்.**

இராணுவப்பிரசன்னத்தைக் குறைத்தல், அரசியல் கைதிகள் விடுதலை என்பவற்றில் நியாயபூர்வமாகச் செயற்படவில்லை.



அரசாங்கம் படிப்படியாக சில நடவடிக்கைகளை மேற் கொள்ள முயன்றாலும் சட்டமா அதிபர் திணைக்களம் அவற்றை முறியடித்து வரு கிறது. நீதியமைச்சரும் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ பாணி யில் செயற்பட்டு வருகிறார்.

ஆனால் புதிய அரசாங்கத் தில் உள்ள சிலர் மஹிந்த குழுவினர் நோக்கங்களுக்குச் சாதகமாகச் செயற்பட்ட போதிலும் கூட அவர்கள் அதில் திருப்தி அடையும் நிலையில் இல்லை.

அவன்காட் விவகாரம் தொடர்பாக மேற்கொள்ளப் பட்டு வரும் விசாரணைகளில் பல பயங்கர விடயங்கள் வெளிப்பட்டு இருக்கின்றன. அதில் கண்டு பிடிக்கப்பட்ட ஆயுதங்களில் இலக்கங்கள் அழிக்கப்பட்ட [illegible] காணப்பட்[illegible]ன. மேலும் அவன்காட் கப்பல் கடற்படை யினரிடம் ஒப்படைக்கப்பட்ட போது ஏராளமான ஆயுதங்கள் காலி துறைமுகத்திலிருந்து 10 கடல் மைல் தொலைவில் பாது காப்பாக பொதி செய்யப்பட்டு கடலுக்குள் மறைக்கப்பட் டுள்ளதாகத் தெரிய வந்துள்ளது.

இது அரசியல் வட்டாரங்களில் மட்டுமல்ல பாதுகாப்புத் தரப்பிலும் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது. இவ்வளவு பெருந்தொகையான ஆயுதங்கள் ஏன் மறைக்கப் பட்டன என்பது தொடர்பாகவும், அவன்காட் கப்பல் சதி நடவடிக்கைக்குப் பயன்படுத்தப்பட்ட முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டதா என்ற கேள்வியும் எழுந்துள்ளது.

அதாவது கடந்த ஆட்சிக்காலத்தில் மஹிந்த குழுவினரால் ஊழல், மோசடி, ஆட்கடத்தல் போன்றவை மட்டுமன்றி ஒரு இராணுவ சர்வதிகாரப் பாணியிலான ஆட்சியை உருவாக்கவும் தயாரிப்புக்களை மேற்கொள்ளப்பட்டனவா என்ற சந்தேகமும் எழுந்துள்ளது.

இவற்றையெல்லாம் மறைத்து அனைத்தும் நாட்டைக் காப் பாற்ற எடுக்கப்பட்ட நட வடிக்கைகள் என்ற ஒரு தோற்றப்பாட்டை உருவாக்கும் வகையில் மஹிந்த குழுவின ரால் தற்சமயம் இனவாதம் கட்டவிழ்த்து விடப்படுகிறது.

இப்பரப்புரைக் களங்களாக விகாரைகள் பயன்படுத் தப்படுவது மட்டுமன்றி அது இப்போது சிறைச்சாலை வரை விரிவடைந்துள்ளது..

சிங்கள மக்கள் இனியும் தங்கள் தலைகளில் தாங்களே மண் அள்ளிப் போடுவார்களா இல்லையா என்பதைப் பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும்.

- ஆசாத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்னையின் பெருமழைக்கு முன்பும் சரி, பிறகும் சரி எல் நினோ (El Nino) என்ற பெயர் அதிகமாக அடிபடத் துவங்கியிருக்கிறது. அதிலும் ஐ.நா சபையின் சமீபத்திய அறிக்கைக்குப் பிறகு எல் நினோவைப் பற்றி நாம் அறிந்துகொள்ள வேண்டியது அவசியம்.

இதோ, எல் நினோவை பற்றிய பத்து தகவல்கள்.

1. 'எல் நினோ' என்பது ஸ்பானிய மொழி வார்த்தை. 'குட்டிப் பையன்' அல்லது 'சிறுவன்' என்பது இதன் பொருள். டிசம்பர் மாதத்துக்குக் கிட்ட அதாவது கிறிஸ்மஸ்ஃக்கு அண்மையாக வளிமண்டல மாற்றம் நிகழ்வாதால் குட்டிப் பையனைப் பொதுவாக 'குழந்தை ஏசு' என்ற

போது வழக்கமாக கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி வீசும் காற்றின் திசையானது அதற்கு நேர்மாறாக மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி திசை மாறுகிறது. காற்று வீசும் திசையின் இந்த ஊசலாட்டத்தின் காரணமாகவே 'எல் நினோ தெற்கத்திய அலைவு' என்று அழைக்கப்படுகிறது.

3. இத்தகைய காற்றின் திசைமாற்றத்தின் காரணமாக பசிபிக் பெருங்கடலின் காலநிலை முற்றிலுமாக மாற்றமடைகிறது. வழக்கமான ஈரப்பதம் மற்றும் மித வெப்பம் கொண்ட பசிபிக்கின் மேற்குப் பகுதியானது எல் நினோவிற்குப் பிறகு ஈரப்பதம் இல்லாமல் குறைந்த மழையும் வறண்ட நிலையும் கொண்டதாக மாறுகிறது. இதேபோல எல் நினோ நிகழ்வால் வழக்கமாக வறண்ட குளிர் மற்றும் குறைந்த

வானிலையில் மாற்றமடைவதையும் கவனித்தே வந்தனர்.

5. தெற்கத்திய அலைவோட்டம் பற்றி அறிவியல் ரீதியான விளக்கத்தை முதன் முதலாக அளித்தவர் இங்கிலாந்தைச் சேர்ந்த 'சர் கில்பர்ட் வாக்கர்'. 1923 ஆம் ஆண்டு அவர் இதை கண்டறிந்தார். 1904 ஆம் ஆண்டு இந்திய வானவியல் ஆராய்ச்சி மையங்களின் தலைமை இயக்குநராகப் பணிபுரிந்த அவர் இந்திய வானிலை ஆராய்ச்சியில், தான் பயின்ற கணிதம் மற்றும் புள்ளியியலை பொருத்தி ஆய்வுகள் மேற்கொண்டார்.

இந்தியப் பருவ கால மழைகளை ஆராய்ந்ததில் சில குறிப்பிட்ட நிகழ்வுகள் அடிக்கடி நிகழ்வதை அவர் கண்டறிந்தார்.

முதல் ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை இந்த நிகழ்வு ஏற்படுகிறது. இந்தக் கால இடைவெளியில் 'எல் நினோ' நிகழ்வு சில வார்ங்கள் முதல் மாதம் வரை நீடிக்கிறது.

சில சமயங்களில் 'எல் நினோ' நிகழ்வானது மூன்று ஆண்டு முதல் ஏழு ஆண்டு வரையிலான கால இடைவெளியில் காணப்படுகிறது. இத்தகைய சமயங்களில் சில மாதங்கள் வரை கூட எல் நினோ நிகழ்வு தொடர்ந்து நடைபெறும்.

7. 'எல் நினோ' நிகழ்வின் விளைவாக தென் அமெரிக்காவை ஒட்டிய கடல் பகுதிகளில் முக்கியமாக பெரு நாட்டின் கடல் பகுதிகளில் கடல் நீரின் வெப்ப நிலை அதிகரிக்கிறது. இதனால், மீன்களின் உணவுட்டப் பொருட்கள் குளிர்ச்சியான நீரின் அடிப்பகுதியில் தங்கிவிடுவதால் மேற்பகுதியின் வெப்பநீரில்

# உலகைப் பயமுறுத்தும் எல் நினோ



பொருள்படும்படியும் அழைக்கிறார்கள்.

பசுபிக் பெருங்கடலின் கிழக்குப் பகுதியின் மேற்பரப்பில் நடைபெறும் வெப்பநிலை மாறுபாடு மற்றும் இதன் உப விளைவாக உலகின் பெரும்பகுதியில் ஏற்படும் வானிலை மாற்றங்கள் ஆகியவற்றின் ஒட்டுமொத்தத் தொகுப்பே 'எல் நினோ.'

2. சுருக்கமாக 'எல் நினோ' என அழைக்கப்பட்டாலும், 'எல் நினோ தெற்கத்திய அலைவு' (El Nino Southern Oscillation d ENSO) என முழுமையாக அழைக்கப்படுவதே சரியானது. கிழக்கு பசுபிக் பெருங்கடலில் எல் நினோ நிகழ்வு ஏற்படும்

மழையைக் கொண்ட பசிபிக்கின் கிழக்குப் பகுதியானது ஈரப்பதமும் மித வெப்பமும் அதிக மழையும் கொண்டதாக மாற்றமடைகிறது.

4. 'எல் நினோ' நிகழ்வைப் பற்றிய முறையான அறிவியல் ரீதியான விளக்கம் மற்றும் கண்டுபிடிப்புகளுக்கு முன்பாகவே மனிதனின் பட்டறிவின் மூலமாக இந்த நிகழ்வு கவனிக்கப்பட்டே வந்தது. பெரு நாட்டின் கடல் பகுதி மீனவர்களும் கப்பலோட்டிகளும் சில ஆண்டுகள் இடைவெளியில் கடலில் நீரோட்டம் வழக்கத்தை விட வெப்பமடைவதையும், மீன்களின் அளவு குறைந்து வருவதையும் கண்டறிந்தனர். இத்தகைய நிகழ்வுகளை அடுத்து

பதினைந்து ஆண்டுகள் இந்திய வானில்லை மாற்றங்கள் மற்றும் பசிபிக் பிராந்திய வானிலையைக் கண்காணித்து வந்ததில் பசிபிக் மற்றும் இந்தியப் பெருங்கடல் பகுதிகளின் வளிமண்டல அழுத்தத்தில் ஏற்படும் ஊசலாட்டம் போன்ற நிகழ்வு தெற்காசியா, இந்தோனேசியா, ஆஸ்திரேலியா, தென் அமெரிக்கப் பகுதிகளின் வானிலையில் மாற்றம் ஏற்படுத்துவதைக் கண்டறிந்தார். இந்த நிகழ்வுகளையே 'எல் நினோ தெற்கு அலைவு' என்று அழைத்தார்.

6. எல் நினோவைப் பொறுத்த வரை, முன்கூட்டியே நம்மால் அதை துல்லியமாக இதுவரை கணிக்க முடிந்ததில்லை. இரண்டு

ஊட்டப்பொருட்களின் தட்டுப்பாடு ஏற்படுகிறது, இதனால் மீன்கள் மடிகின்றன. இதனால் இக்கடல் பகுதிகளில் 'எல் நினோ' நிகழ்வுக் காலத்தில் மீன்களின் எண்ணிக்கை குறைவாகக் காணப்படும்.

8. 1982 ஆம் மற்றும் 1983 ஆம் ஆண்டு ஏற்பட்ட 'எல் நினோ' நிகழ்வின் விளைவாக உலகம் முழுக்க 2000க்கும் மேற்பட்டோர் மரணமடைந்தனர். பொருளாதார ரீதியாகவும் ஆயிரம் கோடிக்கும் மேலான இழப்பு ஏற்பட்டது. 1990-1995 ஆம் ஆண்டு வரை மிக நீண்ட 'எல் நினோ' நிகழ்வு ஏற்பட்டது. இந்தக் காலப்பகுதியில் மிகப்பெரும்

(22 ஆம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வீரம் செறிந்த குர்திய பெண் போராளிகள்

தெ.ஞாலசீர்த்தி மீநிலங்கோ

ஒடுக்கப்படும் சமூகம், தான் ஒடுக்கப்படுவதை உணரும் போது தன்னைச் சூழும் மாயைகளை விலக்கிப் போராடத் தலைப்படுகிறது. அந்தப் போராட்டத்துக்கு ஆண், பெண் வேறுபாடு கிடையாது.

ஆண்களை விட மனவுணர்வுடன் சளையாது போராடும் ஆற்றல் பெண்களுக்கு உண்டெனப் பல போராட்டங்கள் நமக்கு உணர்த்தியுள்ளன.

எனினும், உலகை அச்சுறுத்தும் ஐ.எஸ். பயங்கரவாதிகள் அஞ்சும் போராளிகளாகக் குர்தியப் பெண் போராளிகள் உள்ளமை கொஞ்சம் வியக்கவைக்கும் உண்மையே.

இன்றைய மத்திய கிழக்குச் செய்திகள், சிரியா, அமெரிக்கா, ரஷ்யா, துருக்கி என்பவற்றைச் சுற்றிக் கொண்டிருந்தாலும் அனைத்துக்கு நடுவிலும் பல்வேறு ஒடுக்குமுறையாளர்களுக்கும் ஆக்கிரமிப்பாளர்களுக்கும் எதிராகக் குர்திய மக்கள் தொடர்ந்து தமது விடுதலைக்காகப் போராடி வருகிறார்கள்.

ஐ.எஸ்ஸுக்கு எதிரான போரிற் களமுனைகளிற் பாரிய வெற்றிகளைக் கண்ட அமைப்பாக பி.கே.கே. எனப்படும் குர்திஸ்தான் தொழிலாளர் கட்சி விளங்குகிறது.

குர்திய மக்களுடைய வரலாறு ஈழத் தமிழ் மக்களினது போலத் துயரம் தோய்ந்தது. முதலாம் உலகப் போரின் பின்பு, துருக்கியின் வசமிருந்த மத்திய கிழக்குப் பிரதேசத்தை பிரித்தானிய - பிரெஞ்சு ஆதிக்கவாதிகள் தங்களுக்கு வசதியானபடி கூறுபோட்டனர்.

பிரித்தானிய அடிவருடிகளான சில வசதி படைத்த அரபுக் குடும்பங்களிடம் அராபியத் தீபகற்பம் பங்கிடப்பட்டது. அப்போது உருவான சின்னஞ்சிறு ஷேக் இராச்சியங்கள் பிரித்தானிய ஆதரவிற் தங்கியிருந்தன.

அந்தவேளை, துருக்கிய அரபுப் பிரதேசங்களின் எல்லையில் அமைந்த குர்திய இனத்தின் பெரிய பாரம்பரியப் பிரதேசத்தின் பெரும் பகுதி, முற்குறித்த பிரித்தானிய-பிரெஞ்சுக் குறுக்கீட்டால் துருக்கி, ஈராக், ஈரான் ஆகிய நாடுகளிடையே பங்கிடப்பட்டது.




அதை விட, பழைய சோவியத் ஒன்றிய நாடான ஆர்மெனியாவிலும் வட சிரியாவிலும் குர்தியப் பிரதேசங்கள் இருந்தன. பிரித்தானிய காலனி ஆதிக்கத்தைப் பொறுத்தவரை, மத்திய கிழக்கில் ஒரு வலிய அரபு வல்லரசோ, துருக்கிய வல்லரசோ ஏழாமற் கவனிக்கப்பட்டாற் போதுமானது.

குர்திய மக்களின் நலன்கள் பற்றிய அக்கறை பிரித்தானியர்களுக்கோ, துருக்கியப் பேரரசுக்கோ, அரபு ஷேக்குகட்கோ என்றும் இருந்ததில்லை. ஈரானும் ஈராக்கும் துருக்கியும் குர்திய தேசிய இனத்தவரைப் பலவாறு ஒடுக்கினர்.

அதன் விளைவாக எதிர்ப்பு இயக்கங்கள் உருவாகி வலுப்பெற்றன. ஒவ்வொரு நாட்டிலும் இருந்த இயக்கங்களுள் பிளவுகளும் முரண்பாடுகளும் இருந்தன.

அதை ஒடுக்குமுறையாளர்கள் பயன்படுத்தினர். குறிப்பாக ஈராக்கில், குர்திய உள் முரண்பாட்டை சதாம் ஹுசைன் நன்கு பயன்படுத்தினார்.

அதே வேளை தம் ஒடுக்குமுறையாளர்களிடையே இருந்த முரண்பாடுகளை குர்திய விடுதலை இயக்கங்கள் பயன்படுத்தின.

> ஒடுக்கப்படும் சமூகம், தான் ஒடுக்கப்படுவதை உணரும் போது தன்னைச் சூழும் மாயைகளை விலக்கிப் போராடத் தலைப்படு கிறது. அந்தப் போராட்டத்துக்கு ஆண், பெண் வேறுபாடு கிடையாது.
>
> ஆண்களை விட மனவுணர்வுடன் சளையாது போராடும் ஆற்றல் பெண்களுக்கு உண்டெனப் பல போராட்டங்கள் நமக்கு உணர்த்தியுள்ளன.

இதனிடையே துருக்கியின் குர்திய மக்களிடையே மார்க்சிச லெனினிசப் போக்குடைய குர்திஸ்தான் தொழிலாளர் கட்சி (பி.கே.கே) எனும் வலிய விடுதலை இயக்கம் 1970இல் உருவானது.

குர்திய மொழியைப் பேசுவதையும் சட்ட விரோதமாக்கிய துருக்கிய ஆட்சியாளர்கட்கெதிரான விடுதலை உணர்வை ஒரு முழுமையான சமுதாய விடுதலை உணர்வாக வளர்த்தெடுத்த அக்கட்சி, ஒரு மகத்தான மக்கள் சக்தியாக வளர்ந்தது. அதனால் அதை ஏகாதிபத்தியவாதிகள் மிகவும் வெறுத்தனர்.

தன் மீது துருக்கிய இராணுவ ஒடுக்குமுறை ஆட்சி கட்டவிழ்த்த வன்முறைக்குப் பதிலடியாகவே பி.கே.கே. 1980 முதல் கெரில்லாத் தாக்குதல்களையும் பிற வன்முறைப் போராட்டங்களிலும் இறங்கியது.

அடுத்துக் 'குர்திய மக்களின் பாரம்பரிய வாழ்விடங்கள் ஒன்றிணைத்த குர்திஸ்தான்' தேசத்தைத் தன் குறிக்கோளாக அறிவித்தது.

காலப்போக்கில் பி.கே.கே. சுயநிர்ணய அடிப்படையிலான தீர்வுக்கு உடன்பட்டாலும் மேற்குலகிலும் வெளியிலும் பல நாடுகளில் அது தடை செய்யப்பட்டது.

அதன் தொடர்ச்சியாக, 1999 ஆம் ஆண்டு பி.கே.கே. தலைவர் அப்துல்லா ஒச்சலான் இஸ்ரேலிய உதவியுடன் சிறைப்பிடிக்கப்பட்டார்.

இதைத் தொடர்ந்து துருக்கிய அரசின் ஒடுக்குமுறை பி.கே. கேயுக்குப் பாரிய பின்னடைவாயிற்று. அப் பின்னடைவு சந்தர்ப்பவாத குர்து தேசியவாதிகளுக்கு வாய்ப்பானது.

இங்கு நினைவுகூர வேண்டியது யாதெனில், குர்திய மக்களுக்கு சதாம் ஹுசைன் செய்த கொடுமைகள் பற்றி நம்க்கு நிறையச் சொல்லப்பட்டாலும், குர்திய மக்கள் மீதான ஒடுக்குமுறை, அமெரிக்காவின் மிக நெருங்கிய கூட்டாளி நாடான துருக்கியிலேயே மிகக் கொடுமையாக மேற்கொள்ளப்பட்டது.

விடுதலைப் போராட்டம் அங்கேயே மிக வலிமையுடன் தொடர்ந்தது. துருக்கிய குர்திய விடுதலைப் போராட்டத்தை நசுக்க அமெரிக்காவும் இஸ்ரேலும் மிக உதவியுள்ளன.

1990க்குப் பின்பு, அமெரிக்கா

( 22 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிம்மசொப்பனம் - 57



கார் புறப்பட்டது . சில மைல்களைக் கடந்த பிறகு காஸ்ரோ திடீரென்று வண்டியை நிறுத்தச் சொன்னார். அவசர அவசரமாக சட்டைப்பையைத் தேடத் தொடங்கினார். அவரது மூக்குக் கண்ணாடியைக் காண வில்லை. கார் இருக்கையிலும் தேடியாகி விட்டது. எங்கும் காணவில்லை. அவருக்குத் தெரிந்துவிட்டது. வீட்டுக்குப் போயிருந்தபோது குழந்தையைக் கொஞ்சவேண்டும் என்பதற்காகக் கண்ணாடியைக் கழற்றி அருகில் வைத்திருந்தார். அப்படியே மறந்து திரும்பிவிட்டார். கண்ணாடி மிக அவசியம். அது இல்லாவிட்டால் குறிபார்க்க முடியாது. படிக்க முடியாது. அப்படியே வண்டியைத் திருப்பி எங்கெங்கோ சுற்றி இறுதியில் ஒரு கண் மருத்துவரைக் கண்டுபிடித்தார். கஸ்ரோ அந்த மருத்துவரிடம் கெஞ்சி எப்படியோ ஒரு கண்ணாடியை வாங்கிவிட்டார். பயணம் மீண்டும் தொடர்ந்தது. கண்ணாடிக்காக சில மணிநேரங்கள் செலவழிக்க வேண்டியதாகிவிட்டது.

ஹவானாவை விட்டுக் கிளம்பியிருந்தார்கள். வண்டி கிட்டத்தட்ட பறந்து கொண்டிருந்தது. கஸ்ரோவுக்கு ஏகப்பட்ட வருத்தம். தன்னுடைய கவனக்குறைவை எண்ணி வருந்தினார். சரி இனிமேலாவது தவறுகள் ஏற்படாமல் பார்த்துக்கொள்ளலாம் என்று மனதைத் திடப்படுத்திக்கொண்டு முன்னேறியபோது மற்றொரு அசம்பாவிதம்.

கஸ்ரோ அமர்ந்திருந்த வண்டி காவல்துறையினரால் மடக்கிப் பிடிக்கப்பட்டது. 'தொலைந்தோம்!' என்றே அனைவரும் நினைத்தனர். பின் இருக்கையில் கஸ்ரோ, அவருக்கு அருகே துப்பாகிகள். கஸ்ரோ சுதாகரித்துக்கொண்டார். வண்டி தடுத்து நிறுத்தப்பட்ட காரணத்தை சம்பந்தப்பட்ட அதிகாரியிடம் கேட்டறிந்தார். அதிக வேகத்தில் வண்டியை ஓட்டிச் செல்வது தண்டிக்கத்தக்க குற்றம் என்று அந்த அதிகாரி கூறியதும், கஸ்ரோ பணிந்துபோனார். அவசரமாக ஓர் உறவினரைச்சந்திக்க வேண்டும் என்றும் அதற்காகத்தான் விமானநிலையத்தை நோக்கி விரைந்து கொண்டிருப்பதாகவும் சமாளித்தார். அபராதத் தொலைகையைச் செலுத்திய பிறகு கார் மீண்டும் பறந்தது.

சில நிமிடங்களில் மீண்டும் தடுத்து நிறுத்தப்பட்டனர். அது ஒரு இராணுவச் சோதனைச்சாவடி. ஓடிவந்த இராணுவ வீரர்கள் கஸ்ரோவின் கார் கதவைத் திறந்தனர். எந்தப் பக்கமாகத் தப்பி ஓடலாம் என்று கஸ்ரோ தனது கண்களை அலையவிட்டுக்கொண்டிருந்தார். அவரது கைகள் கைத்துப்பாக்கியை இறுகப் பற்றிக் கொண்டிருந்தன. ஆனால், அதற்கான அவசியம் ஏற்படவில்லை. சோதனையிட வந்த இரு இராணுவ வீரர்களில் ஒருவன் கஸ்ரோவின் காரை ஓட்டிவந்த மிட்சல் என்பவனுடைய நண்பன். இருவரும் ஒரே ஊரைச் சேர்ந்தவர்கள். மிட்சலைப் பார்த்ததும் அவன் கஸ்ரோவை விட்டு விலகி அவனிடம் பேசத்தொடங்கிவிட்டான். சோதனை போடாமலேயே கார் விடுவிக்கப்பட்டது.

கஸ்ரோவின் கார் மட்டுமல்ல ஆபேல் சண்டமாரியாவின் காரும் சிக்கலில் மாட்டிக்கொண்டது. மொத்தம் 23 பேர் அவரது தலைமையின் கீழ் இருந்தனர். சிறு சிறு குழுக்களாகப் பிரிந்து சென்றுகொண்டிருந்தனர். கிளம்பிய சிறிது நேரத்திலேயே ஆபேலின் கார்ச் சக்கரம் தட்டையாகிவிட்டது. அதனைச் சரிபார்த்து மீண்டும் புறப்படுவதற்கு நீண்ட நேரம் ஆகிவிட்டது. அதேபோல் மேயோ டால்மா என்பவர் தவறான வழியில் வண்டியை ஓட்டிச் சென்று நீண்ட தொலைவு சென்றதும், மீண்டும் வந்த வழியே திரும்பி சரியான பாதையைக் கண்டுபிடித்த பிறகு இலக்கை அடைந்தார்.

திட்டம் தெளிவாக இருந்தாலும், இதுபோன்ற கடைசி நிமிடச்சிக்கல்கள் சில தொய்வுகளை ஏற்படுத்திவிட்டன. அதிகாலைக்குள் தாக்குதலைத் தொடங்கிவிட வேண்டும் என்பதுதான் அவர்களது திட்டம். ஆனால் கிட்டத்தட்ட அனைத்து வண்டிகளும் தாமதமாகவே முகாமை அடைந்தன. இருட்டு வேறு என்பதால் வழிதெரியாமல் தவிப்பவர்களை மீட்க முடியவில்லை. ஒரு குழு மற்றொரு குழுவோடு தொடர்பு கொள்ள இயலவில்லை. முகாமை இவர்கள் நெருங்கும்போதே வெளிச்சம் பிறந்துவிட்டது. முதல் தாக்குதல் படை தயார் நிலையில் இருந்தது. மொத்தம் எட்டுப்பேர். நால்வர் துப்பாக்கி நிபுணர்கள். குறிதவறாமல் சுடுவதில் தேர்ச்சி பெற்றவர்கள். திட்டமிட்டபடி இந்தப் படை மூன்றாவது நுழைவாயிலை அடைந்தது. சிறு சத்தமும் எழவில்லை. மறைந்திருந்து சிறுது நேரம் கவனித்தனர். முகாமுக்குள்ளே மொத்தம் இரண்டு வீரர்கள் இராணுவ உடையில் கையில் துப்பாக்கியுடன் குறுக்கும் நெடுக்குமாக நடந்து கொண்டிருந்தனர்.

## சொற்சிலம்பம் போட்டி இல. 705

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | | 3 | 4 | ■ | 5 | 6 |
| 7 | | ■ | 8 | | 9 | ■ | |
| 10 | | 11 | | ■ | 12 | 13 | |
| ■ | 14 | | ■ | 15 | | | ■ |
| 16 | ■ | 17 | 18 | | | ■ | 19 |
| 20 | 21 | | | | ■ | 22 | |
| 23 | | ■ | | ■ | 24 | | |
| | ■ | 25 | | | | | ■ |

**மேலிருந்து கீழ்**

1.நெஞ்சுக்குப் பின்புறம்.
2.இனிப்பானது.
3.சேலை.
4.செல்வம்.
6.வேகமான செயல்போக்கு.
9.அதிகம்.
11.எதிரிகள்.
13.தமது.
15.முதுகு வளைவதால் வருவது.
16.தேவர்கள் திருப்பாற்கடலைக் கடைந்தது இதற்காக.
18.நூறு செய்யுள் கொண்ட பிரபந்தம்.
19.ஆபத்தான வெடிப்பொருள்.
21.விழி.
22.வலிமை.
24.சமய.

**இடமிருந்து வலம்**

1. ஒருவருக்கு முன்னால் அவரைப் புகழ்தல்.
5.திறப்பு.
7. இரும்பில் பிடிப்பது.
8.நுண்ணுயிர்.
10.கூட்டம்.
12.வாசலில் இருப்பது.
14.நெருப்பில்லாமல் இது வராது .
15.சேவல் விடிகாலையில் செய்வது.
17.சொற்களின் கூட்டம்.
20.மணத்தல்.
22.இசைப்பாட்டு.
23.குளிர்மை.
24.குழந்தைப் பேறு இல்லாதவள்.
25.இணக்கம்

அனுப்புபவர் பெயர்:........................................

விலாசம்:........................................

........................................

கையொப்பம்:........................................

### சொற்சிலம்பம் போட்டி இல. 705

சொற்சிலம்பம் போட்டி 705ற்கான விடைகளை அனுப்பி வைக்கவேண்டிய இறுதித் தினம் 2016 ஆம் ஆண்டு ஜனவரி 13ஆம் திகதி ஆகும். விடைகள் மற்றும் வெற்றி பெற்றவர்களின் பெயர்கள் முறையே 2016 ஜனவரி 20 மற்றும் ஜனவரி 27ஆம் திகதிய சுடர் ஒளியில் பிரசுரமாகும். தபாலட்டையில் ஒட்டப்பட்டு அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மட்டும் ஏற்றுக் கொள்ளப்படும்.

முதலாவது பரிசாக ரூபா 250 உம் இரண்டாவது பரிசாக ரூபா 150 உம் மூன்றாவது பரிசாக ரூபா 100 உம் வழங்கப்படும். பலர் விடைகளைச் சரியாக எழுதியிருப்பின் அதிஷ்டக் குலுக்கல் மூலம் பரிசுக்குரியவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

அனுப்ப வேண்டிய முகவரி:

**சுடர் ஒளி யாழ். அலுவலகம்,**
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

## போட்டி இல. 702இல் பரிசு பெற்றோர்

| | |
|---|---|
| 1 ஆம் பரிசு | **பாலகிருஷ்ணன் கவிவர்ஷன்,** பத்திரகாளி கோயிலடி, வண்.மேற்கு, யாழ்ப்பாணம். |
| 2 ஆம் பரிசு | **சு.மாதவி,** தொட்டிலடி மத்தி, சண்டிலிப்பாய், யாழ்ப்பாணம். |
| 3 ஆம் பரிசு | **க.கௌரிதேவி,** வட்டு. கிழக்கு, வட்டுக்கோட்டை. |

பரிசுக்குரியோராகத் தேர்ந்தெடுக்கப்படுவோர் ஒரு வாரத்தின் பின்னர் அலுவலக நேரத்தில் தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்தி யாழ். உதயன் அலுவலகத்தில் நேரில் வந்து பெற்றுக் கொள்ளலாம். மேலதிக தொடர்புகளுக்கு 021 567 7609 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

### சொற்சிலம்பம் போட்டி இல. 703க்கான விடைகள்

**மேலிருந்து கீழ்**

1.சிவப்பு.
2. கிளி.
3.சைவம்.
4. முத்தம்.
5. காதம்.
6. மைல்.
9.குமரன்.
10.சன்னி.
12.தமது.
14.குடும்பம்.
16.தலைப்பு.
17.நட.
18.எருது.
19.கடுகு.
20.சாம்.

**இடமிருந்து வலம்**

1.சிகிச்சை.
4.முகாமை.
7.வளி.
8.வகுத்தல்.
10.சம்மதம்.
11.புதன்.
13.ரம்.
15.மனிதன்.
17.நடு.
18.எது.
19.கடம்.
20.சாப்பாடு.
21.துரும்பு.
22.குலம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பிறப்பு என்ற ஒன்றின் மூலம் மனிதன் உட்பட பல உயிரி னங்கள் இந்தப் பூவுலகில் உயிர் பெற்று, உணவு, உடை, இருப்பிடம் போன்ற அத்தியாவசி யத் தேவைகளுக்காக அன்றாடம் போராடி வரு கிறான். இவனது போராட்டங்கள் எங்கிருந்து ஆரம் பிக்கிறதென்றால், தாயின் கருவறையிலி ருந்து நிலவறைக்கு வருகிறானே! அப்போது ஆரம் பிக்கும் இந்த போராட்டம் அவன் மரணப் படுக்கை யில் படுக்கும்போதுதான் ஓய்ந்து போகும்.**



# எழுவதும், வீழ்வதும் பெற்றோர்களின் கையிலே!

ரா. சத்தியமூர்த்தி

பிறப்பு என்ற ஒன்றின் மூலம் மனிதன் உட்பட பல உயிரி னங்கள் இந்தப் பூவுலகில் உயிர் பெற்று, உணவு, உடை, இருப் பிடம் போன்ற அத்தியாவசியத் தேவைகளுக்காக அன்றாடம் போராடி வருகிறான். இவனது போராட்டங்கள் எங்கிருந்து ஆரம் பிக்கிறதென்றால், தாயின் கருவறையிலிருந்து நிலவறைக்கு வருகிறானே! அப்போது ஆரம்பிக் கும் இந்த போராட்டம் அவன் மரணப்படுக்கையில் படுக்கும் போதுதான் ஓய்ந்து போகும்.

ஒரு குழந்தை, தனது தாயின் கருவறையில் இருந்து வெளியே றிய பிறகு அந்த தாயின் மடியி லும், தந்தையின் மார்பிலும் படுத் துறங்கி, விளையாடி மகிழ்ந்த காலத்திலிருந்து மெல்ல மெல்ல விடுபட்டு, பள்ளிப் பருவம் அடைகிறது. இந்த பள்ளிப் பருவத்தில், குழந்தைகள் பல்வேறு விஷயங்களைக் கற்றுக்கொள்ள அல்லது தெரிந் து கொள்ள அதீத ஆர்வமாக இருப்பார்கள்.

அக்குழந்தையின் பெற்றோரோ சிறந்த ஒரு தனியார் அல்லது அரச பாடசாலையைத் தேர்ந்தெடுத்து, அதில் தனது குழந் தைக்கு இடம் கிடைக்க தவமாய் தவமிருந்து கடன்பட்டு, அல்லல் பட்டு, ஒரு பெருந்தொகையை செலுத் தி, அக்குழந்தையை பள்ளி யில் சேர்த்து விடுவர். அப்படி சேர்த்து விடப்படும் குழந்தை, விளையாட் டிலோ, அல்லது கலையிலோ, அல்லது இசையிலோ ஆர்வம் கொண்டு கற்க விரும்புவர். இன் னும் சொல்லப் போனால், சிறு சிறு கண்டு பிடிப்புகளை அவர்களே சுயமாக சிந்தித்து, இளம் விஞ்ஞானிகளாக கூட இருப்பர். அத்தகைய குழந்தைகள் தனது திறமைகளை, முதலில் தனது பெற்றோரிடம் தான் காட்டுவர். அப்போது அவர்களது ஆர்வத்தை புரிந்து கொண்டு, அவர்களை மென்மேலும் ஊக்கு விக்க வேண்டும். அதை விடுத்து, இதை யெல்லாம் உன்னை யார் செய்ய சொன்னது. போன பரீட்சையில் நீ 80 புள்ளிகள் எடுத்தாய், வாற பரீட்சையில் நீ 100 எடுக்க வேண்டாமா? நீ இப்படி படிக்காமல் கண்டதை செய்து கொண்டு இருந்தால் எப்படி அதிக புள்ளிகள் எடுப்பாய்? இதற்கா கவா உன்னை ஊரிலேயே சிறந்த அந்த தனியார் பாடசாலை யில் சேர்த்து, ஆயிரமாயிரமாய் கொட்டி அழுதேன்! என்று அவர் களை கடிந்து கொண்டு, அவர் களது கண்டு பிடிப்புக்களை அல் லது திறமைகளை ஏளனம் செய் வதும், அவர்களை உதாசீனம் செய் வதும் எந்த விதத்தில் நியாயம்?

குழந்தைகளை ஒரு வியாபாரப் பொருளாக, பெற்றோர்கள் பார்க் காமல் அவர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிக்க வேண்டும். கல்வி என்பது இன்றைய உலகில் அவசிய மான ஒன்றுதான்! அதற்காக அந்தக் குழந்தையை எந்நேரமும், நீ இதைப்படி [illegible] என்று நச்சரித்துக் கொண்டே இருந்தால், அவர்களது மனதில் அந்த கல்வியின் மீது ஒருவித வெறுப் புணர்ச்சி ஏற்பட்டு ஒரு வித தாழ்வு மனப் பான்மையும் உருவாகி, பிற்காலத்தில் தனக்கு விருப்பம் இல்லாத துறையில் பணியாற்றிக் கொண்டு, ஏதோ பிறந்தோம், ஏதோ வாழ்கிறோம் என்ற ஒரு அலட்சியப்போக்கு ஏற்பட்டு, வாழ்க்கையில் சாதிக்க வேண்டும் என்ற முனைப்பின்றியும், தனது சிறுவயதில் தனது திறமைகள் அத்தனையும் ஒடுக்கப்பட்டு விட்டதே என்ற ஏக்கமும் அதனால் உண்டாகும் மன அழுத்தத்திற்கும் ஆட்பட்டு, நடைப் பிணமாக வாழ வேண்டிய நிலைக்கு தள்ளப்படுவார்கள். இவ்வளவு ஏன்? சிறு வயதில் தனது திறமைகளை அங்கீகரிக்காத அவனது பெற்றோர்களான உங்கள் மீது [illegible]ில் ஆழ பதிந்து போன ஏக்கங்களும் துயரங்களும், கோவமாக வெளிப்பட்டு உங்களையே கூட அவன் வெறுக்க வாய்ப்பு ஏற்படும்.

கல்வியை ஆர்வமாக எடுத்து படிக்கும் மாணவர்களுக்கு இதில் எந்தவிதமான சங்கடமுமில்லை. ஆனால், கல்வியை தவிர இதர பிரிவுகளில் தங்களது தனித்திறமையைக் காட்டும் மாணவர்களுக்கு, அவர்கள் விருப்பபிரிவை, முதன்மையாக கொண்டும், கல்வியை இரண்டாம் பட்சமாக ஏற்று, அவர்களது தனித்திறமையுடன் கல்வியிலும் சிறந்து விளங்கச்செய்யலாம்.

கூடுகட்டி முட்டை இட்டு, குஞ்சு பொரிக்கும் பறவைகள் கூட, தனது குஞ்சுகளுக்குச் சிறகுகள் முளைக்கும் வரைதான் எங்கிருந்தோ தான்கொண்டு வந்த உணவைத் தனது அலகால் தனது குஞ்சுகளுக்கு ஊட்டிவிடும். அந்தக் குஞ்சுகளுக்கு சிறகுகள் முளைத்து விட்டால், தான் உணவூட்டுவதை நிறுத்திவிட்டு, அந்த குஞ்சுப் பறவைகளை கூட்டிலிருந்து கீழே தள்ளிவிட்டு வேடிக்கை பார்க்குமாம். கீழே விழுந்த குஞ்சுப் பறவையோ தான் எங்கே கீழே விழு ந்து பலமாக அடிபட்டு விடுமோ என்ற பயத்தில் தனது சிறகுகளை படபட விரித்து பரந்து விரிந்து கிடக்கும் வானில் பறந்து செல்லுமாம்.

ஏனோ இந்த மனிதன் மட்டும்தான்! தனது குழந்தைகள், தனக்கென ஒரு துறையைத் தேர்வுசெய்து அதில் முன்னேற விரும்பி தனது சிறகுகளை விரித்து, வானில் பறக்க முற்படும்போது, பெற்றோர்கள் அந்தக் குழந்தையின் சிறகுகளை ஒடித்துவிட்டு, தனது சிறகுகளை விரித்து அடைகாத்து வருவதுதான் வேடிக்கையிலும் விநோதம்.

குழந்தைகள், தாங்கள் முன் னேற, ஒரு துறையை தேர்ந்தெடுக் கும்போது, அந்தக்குழந்தைகளை ஊக்கு வித்து, அவர்களுடன் நட்பு பாராட்டி, அத்துறையிலேயே அவர்க ளுக்கு தகுந்த பயிற்சி கொடுத்து, ஒரு நல்ல சாதனையாளனாக உருவாக பெற்றோர் தங்களது முழு ஒத்துழைப்பை வழங்க வேண்டும். அப்போது தான் குழந்தைகள், பிற்காலத்தில் தங்களது வாழ்க்கையில் வெற்றிகள் பல குவித் து, முழு மன நிறைவுடன் சாதனை கள் பல படைப்பது திண்ணம்!.

நன்றி : ஸ்ரீ முருக விஜயம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# எமி ஜாக்ஸனின் உருவப் பொம்மை எரிப்பு


தமிழ் சினிமாவில் முன்னணி நடிகையாக வளர்ந்து வருபவர் எமி ஜாக்ஸன். இவர் தற்போது ரஜினி, விஜய் போன்ற முன்னணி நடிகர்களின் படத்தில் நடித்து வருகிறார். இந்த நிலையில் தமிழகத்தில் ஜல்லிக்கட்டு நடக்கூடாது என்று ஒரு சில பிரபலங்கள் கூறினர். இதற்கு நானும் ஆதரவு என எமி கூறினார். இதனால் கோபமடைந்த ஒரு இயக்கம் இவரின் உருவ பொம்மையை எரித்து தங்கள் எதிர்ப்பைக் காட்டினர். உடனே அங்கு சென்ற பொலிஸார் 21 பேரை கைது செய்துள்ளனர்.



# சிம்புவுக்கு ஆதரவுக் குரல்

சிம்புவின் பீப் பாடலுக்கு தமிழகம் எங்கும் எதிர்ப்பு அதிகமாகி வருகின்றது. அதே நேரத்தில் இளைஞர்கள் சிலர் தங்கள் ஆதரவையும் தந்து வருகின்றனர். இந்த நிலையில் இந்தப்பாடலை மாதர் சங்கங்கள் தான் கடுமையாக எதிர்த்தனர். தற்போது சிம்புவுக்கு ஆதரவாக ஆண்கள் பாதுகாப்புச் சங்கம் களத்தில் இறங்கியுள்ளது. இவர்கள் கூறுகையில் இது அதிகார பூர்வ பாடல் இல்லை. இணையத்தளத்திலிருந்து கசிந்து விட்டவை. இதனால் சிம்பு மற்றும் அனிருத் ஆகியோருக்கு எதிராக சட்டத்துக்கு விரோதமாக செயல்படுபவர்களை தமிழ்நாடு ஆண்கள் பாதுகாப்பு சங்கம் வன்மையாக கண்டிக்கிறது என்று கூறியுள்ளனர்.

# தனுஷின் அதிரடி முடிவு-?




தனுஷ் நடிப்பில் சமீபத்தில் திரைக்கு வந்த படம் தங்கமகன். இந்தப்படம் குடும்ப ரசிகர்களை கவர்ந்தாலும் தனுஷ் ரசிகர்களை திருப்திப் படுத்தவில்லை. இந்தநிலையில் இனி இதுபோல் உணர்வு பூர்வமான படங்களில் நடிக்க வேண்டாம் என்று முடிவு செய்துள்ளாராம். மேலும், மாரி, வேலையில்லாப் பட்டதாரி போன்ற அதிரடியான படங்களைத் தேர்ந்தெடுத்து நடிக்கவுள்ளாராம்.



# முருகதாஸை கவர்ந்து இழுத்த இசையமைப்பாளர்

முருகதாஸ் படங்கள் என்றாலே மாஸ், சமூக கருத்து என அதையும் தாண்டி பட... பாடல்களும் ரசிகர்களை கவரும். இவர் இதுநாள் வரை யுவன், ரகுமான், ...ளையரா... அனிருத் என பல இசையமைப்பாளர்களிடம் பணி புரிந்துள்ளார். இந்நிலையில் சம்ப... படத்தின் பாடல்களை முருகதாஸ் கேட்டுள்ளார். இப்பாடல்கள் தனக்கு மிகவும் பிடித்... அதிலும் முட்டபஜ்ஜி என்ற பாடல் மிகவும் கவர்ந்ததாக கூறியுள்ளார். மேலும், தான் ... அடுத்த படத்திற்கு 4வது முறையாக ஹாரிஸ் ஜெயராஜையே இசையமைப்பாளராக... செய்துள்ளார். முருகதாஸும், ஹாரிஸ் ஜெயராஜும் இடையில் பிரிந்தது குறிப்பிடத்த...

# பதிலடி கொடுத்த பூஜா



ஜே ஜே, அட்டகாசம், ஓரம்போ, நான் கடவுள் படங்களின் மூலம் ரசிகர்களை கவர்ந்தவர் பூஜா. இவர் சமூக வலைத்தளத்தில் தன்னை பற்றி ஆபாசமாகப் பதிவிட்ட ரசிகருக்கு பதிலடி கொடுத்துள்ளார். இவரின் புகைப்படத்திற்கு கீழ் ரசிகர் ஒருவர் சமூக வலைத்தளத்தில் அவரின் உடல் குறித்து வர்ணித்தார்.

இதனால் கோபமான அவர் என்னை ஆபாசமாக வர்ணித்த உன்னை கடவுள் தான் காப்பாற்ற வேண்டும். நீயும் ஒரு பெண்ணிடம் இருந்து தான் வந்திருக்கிறாய், உன் சகோதரி, தாயும் ஒரு பெண் என்பதை மறந்து விடாதே, நீ திருந்தி வாழ இன்னும் அவகாசம் உள்ளது என பதிலடி கொடுத்துள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## பசங்க 2 வெளியீடு


சூர்யாவின் 2டி நிறுவனத்தின் தயாரிப்பில், பாண்டிராஜ் இயக்கத்தில் உருவான பசங்க2 வெளியாகியிருக்கிறது. இந்தப்படத்தைத் தமிழில் வெளியிடும்போதே தெலுங்கிலும் வெளியிடத் திட்டமிட்டிருந்தார்களாம்.

படத்தின் கருத்து எல்லா மொழிகளுக்கும் பொருந்தும் என்பது மட்டுமின்றி தெலுங்கு ரசிகர்களுக்கும் பிடித்த சூர்யா மட்டுமின்றி அவர்களுக்குப் பரிச்சயமான அமலாபால், பிந்துமாதவி ஆகியோரும் நடித்திருப்பதால் படத்தைத் தெலுங்கில் வெளியிட முடிவுசெய்தனர். தெலுங்கில் 'மேமு' என்று பெயரிட்டிருந்தனர். தெலுங்கில் சூர்யாவின் படங்களுக்கு பெரிய அளவில் வியாபாரம் இருக்கிறது.

இந்தப்படத்தில் அவர் சிறப்புத்தோற்றத்தில் நடித்திருப்பதால் அதற்கேற்ப வியாபாரம் செய்து படத்தை வெளியிடத் திட்டமிட்டிருந்தனர். ஆனால் திட்டமிட்டபடி தெலுங்குப்பட வேலைகள் முடிவடையாததால் படத்தை வெளியிட முடியவில்லையாம். இதனால் ஓரிருவாரங்களுக்குப் பிறகு அங்கு படத்தை வெளியிட முடிவுசெய்திருக்கிறார்களாம்.

பசங்க 2 தள்ளிவைத்ததால் நன்மை விளைந்திருப்பதாகச் சொல்கிறார்கள். படத்துக்குத் தமிழில் நல்ல வரவேற்பு கிடைத்திருப்பதால் அங்கு இன்னும் கொஞ்சம் விலையை உயர்த்திவிடலாம் என்றும் சொல்கிறார்கள்.





## பீப் பாடல் சர்ச்சை

அனிருத் இசையில் சிம்பு பாடிய பீப் பாடல் கடந்த சில நாள்களாக அதீத எதிர்ப்புக்களையும், கடும் விமர்சனத்தையும் சந்தித்து வருவதுடன்,

சிம்பு அனிருத் மீது பல காவல்நிலையங்களில் புகார்கள் பதியப்பட்டு, அது நீதிமன்றத்திலும் வழக்கு தொடுக்கப்பட்டு சிம்பு ,அனிருத் ஆகிய இருவருக்கும் கடும் நெருக்கடியை கொடுத்து வருவது நீங்கள் அறிந்த செய்தியே!

தற்போது இந்த பீப் பாடலை விளையாட்டாக நினைத்து தனது நண்பர்களுக்கு பகிர்ந்தது நடிகர் சிவகார்த்தியேன் தானாம். அனிருத்தின் நெருக்கமான நட்பு எல்லையில் இருப்பதால், அவருக்குத்தான் இந்த பீப் பாடலை அனிருத் முதலில் பகிர்ந்து உள்ளாராம்.

இதனை நடிகர் சிவகார்த்தியேன், தனது சக நண்பர்களுக்கும் பகிர்ந்து கொண்டிருக்கிறார். இந்த பாடலை பகிர்ந்துகொண்ட யாரோ ஒரு நண்பர் தான் இந்தபாடலை வலைதளத்தில் பதிவேற்றி விட்டிருக்கிறார். இத்தனை சர்ச்சைகளுக்கும் இதுதான் காரணமாம். இதுவரை இந்த எதிர்ப்பு பேரலையில் சிக்கித் தவித்துவரும் சிம்பு ,அனிருத் வரிசையில் தற்போது சிவகார்த்தியேனும் சிக்கித் தவித்து வருகிறாராம். இதனால் பல்வேறு இடங்களில் நடிகர் சிவகார்த்தியேனுக்கும் எதிர்ப்புகள் பலமாக கிளம்பியிருக்கிறது.

வலைதளங்களிலும் வாட்ஸ்அப்பிலும் பரவிவரும் இந்தச்செய்தி வெறும் வதந்தியா? அல்லது உண்மையா? என்பதுபோக போகத்தெரியும்.



## ரஜனிகாந்தின் படத்தை ரீமேக் செய்யும் ஆர்யா ?

சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் கொடுத்த ஹிட் படத்தை எண்ண வேண்டும் என்றால் இரு கைகைகள் போதாது. ஆனால், அவர் கொடுத்த ஹிட் படங்களை ரீமேக் என்ற பெயரில் சோதப்பி வைப்பது தான் தற்போதையே ட்ரண்ட்.இதற்கு மாப்பிள்ளை, முரட்டுக்காளை போன்ற படங்கள் உதாரணம். அஜித் நடித்த பில்லா படம் மட்டுமே இதில் ஹிட் வரிசையில் இடம்பிடித்தது.இந்நிலையில் ரஜினியின் சூப்பர் ஹிட் படமான பாண்டியன் படத்தை சுராஜ் இயக்கத்தில் ஆர்யா நடிக்கவிருப்பதாக கோலிவுட்டில் கிசுகிசுக்கப்படுகின்றது.



ர்?

டி படத்தில்

ளையராஜா, ஹாரிஸ்,

ல் சமீபத்தில் கெத்து

ம் பிடித்ததாகவும்,

தான் இயக்கும்

ளராக கமிட்

பிடத்தக்கது.

## அசினுக்கு 'டும்' 'டும்'



ஜெயம் ரவி ஜோடியாக எம்.குமரன் சன் ஆப் மகாலட்சுமி படத்தில் அறிமுகமானவர் அசின். தசாவதாரம் படத்தில் கமல்ஹாசன் ஜோடியாக நடித்தார். விஜய், அஜித், விக்ரம், சூர்யா போன்றோருடன் நடித்து முன்னணி நடிகையாக உயர்ந்தார். மலையாளம், தெலுங்கு படங்களிலும் நடித்துள்ளார். தமிழில் அசின் நடித்த 'கஜினி' படம் வசூலில் சாதனை படைத்தது.

இந்த படம் அமீர்கான் நடிக்க இந்தியில் மொழிமாற்றம் செய்தபோது அதிலும் அசினே நடித்தார். அந்த படம் வெற்றிகரமாக ஓடியதால் இந்தி திரையுலகிலும் கலக்கினார். சல்மான்கான், அக்ஷய்குமார், அபிஷேக்பச்சன், அஜய் தேவ்கான், ஜான் ஆபிரகாம் என முன்னணி நடிகர்களுடன் நடித்தார்.

இந்த நிலையில் அசினுக்கும் மைக்ரோமேக்ஸ் செல்போன் நிறுவன உரிமையாளர் ராகுல் சர்மாவுக்கும் காதல் மலர்ந்தது. இருவரும் திருமணம் செய்து கொள்ள முடிவு செய்தனர்.

இதனை அவர்கள் பெற்றோரும் ஏற்றுக்கொண்டனர். கடந்த நவம்பர் 26 ஆம் திகதி இவர்களின் திருமணம் நடக்கப்போவதாக தகவல் வெளியானது.

ஆனால் அப்போது திருமணத்தை நடத்தாமல் தள்ளி வைத்து விட்டனர். திருமணத் திகதியையும் வெளியிடவில்லை. இந்த நிலையில் ஜனவரி 23ஆம் திகதி திருமணத்தை நடத்த தற்போது முடிவு செய்துள்ளனர்.

டெல்லியில் உள்ள பண்ணை வீட்டில் அசின்-ராகுல் சர்மா திருமணம் நடக்கிறது. மும்பையில் திருமண வரவேற்பை நடத்துகிறார்கள்.

திருமண அழைப்பிதழ் அச்சிடப்பட்டு நடிகர்-நடிகைகள் மற்றும் உறவினர்களுக்கு வினியோகித்து வருகிறார்கள். திருமணத்துக்குப் பிறகு சினிமாவை விட்டு விலக அசின் திட்டமிட்டு உள்ளார். தற்போது புதுப்படங்களில் அவர் ஒப்பந்தமாகவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எளியமுறையில் சுகம்பெற...

பித்தவெடிப்பு வந்தால் கால் அசிங்கமாகத் தெரியும். வலி வேறு ஒரு வழி பண்ணிவிடும். இதற்கும் வைத்தியம் இருக்கிறது பயப்படாதீர்கள்.

நன்னாரிவேர் 10 கிராம் எடுங்கள். அதோட ஒரு கப் (டம்ளர்) தண்ணி சேர்த்து கொதிக்க வைத்து, அரை கப் ஆக வற்றியதும் வடி கட்டி வையுங்கள். அதில் பனங்கற் கண்டு சேர்த்து குடித்து வந்தால் பித்தவெடிப்பு மறைந்துவிடும். ஒரு தடவை பயன்படுத்திய நன்னாரி வேரை 3, 4 தடவைகூட பயன்படுத்தலாம்.

பித்தவெடிப்பு உள்ள இடத்தில் மருதாணி இலையை அரைச்சு பத்து போட்டாலும் குணம் கிடைக்கும். வெள்ளை கரிசலாங் கண்ணி இலையைப் பொடி செய்து, ஒரு சிட்டிகை தேன் சேர்த்து, ஒரு மண்டலம் சாப்பிட்டு வந்தாலும் பித்தவெடிப்பு சரியாகும்.

**நகச்சுத்து மாற...**

நகச்சுத்து உள்ள இடத்தில் மருதாணி இலையை அரைச்சு பத்து போட்டு வந்தால் குணமாகும்.

வேப்பிலை கொஞ்சம் எடுத்து, அதனுடன் மஞ்சள்துண்டு சேர்த்து அரைச்சு நகச்சுத்து வந்த இடத்தில் பூசினால் குணமாகும். இதனைத் தொடர்ந்து ஒரு வாரம் செய்து வந்தால் உரிய பலன் கிடைக்கும்.

**ஆணியை விரட்டியடிக்க ...**

காலத்துக்கு ஏற்ற மாதிரி, இடத்துக்கு தகுந்த மாதிரி சில நோய் வந்தால் பாடாய்ப்படுத்தி விடும். அதிலும் சில நோய் இருக்கின்ற இடம் தெரியாது. ஆனால் ஆளைப் படாதபாடு படுத்திடும். இந்தக் கால் ஆணி இருக்கிறதே, அது வந்துட்டால் உயிர் போற மாதிரி வலி எடுக்கும். சிலர் என்ன வைத்தியம் செய்வது என்று தெரியாமல் பனைவெல்லத்தை கால் ஆணி உள்ள இடத்தில் வைத்து தீக்குச்சியைப் பற்ற வைப்பார்கள்.

இன்னும் சிலர் பிளேடினால் இரத்தம் வருகிற அளவுக்கு 'ரவுண்ட் ரவுண்டா' அறுத்து எடுப்பார்கள். எவ்வளவு கொடுமையான வைத்தியம் பாருங்கள்.

கைவசம் எளிமையான வைத்தியமெல்லாம் இருக்கும் போது எதுக்காக இந்த முரட்டு வைத்தியம்?

அம்மான் பச்சரிசி செடி என்று கேள்விப்பட்டிருப்பீங்கள். அந்தச் செடியை உடைத்து, அதில் வருகின்ற பாலை எடுத்து, கால் ஆணி இருக்கற இடத்தில் தடவி வந்தால் அந்தப் பிரச்சினை மறைந்தி போய்விடும்.

ஒரு செடியை சிறிது சிறிதாக உடைத்து அதில் வரும் பாலைப் பயன்படுத்தலாம். ஒரு தடவை தடவினதும் மாறாது. தொடர்ந்து இண்டு வாரமாவது அவ்வாறு செய்ய வேண்டும். பிறகு போகப் போக ஆணியும் மறைந்திடும்.

மருதாணி இலை சிறிதளவு, மஞ்சள் துண்டு கொஞ்சம் இரண்டையும் எடுத்து மையாக அரைக்க வேண்டும். ஒரு நெல்லிக்காய் அளவு எடுத்து, இரவு தூங்கப் போவதற்கு முன்னால் கால் ஆணி உள்ள இடத்தில் வைத்துக் கட்ட வேண்டும். தொடர்ந்து 10 நாள் செய்து பாருங்கள். துண்டக் காணோம். துணியைக் காணோம் என்று ஓடிப்போய்விடும் ஆணி.

சித்திரமூலம் (இதை கொடிவேலி என்றும் சொல்வார்கள். நாட்டு மருந்து கடைகளில் கிடைக்கும்) வேர்ப்பட்டையை ஒரு புளியங்கொட்டை அளவு எடுத்து அரைத்து தூங்கப் போவதற்கு முன்னால் கால் ஆணி மேல் பூசி வந்தால் மூன்று நாளில் குணமடையும். இந்த வைத்தியம் செய்யும்போது சிலருக்கு அந்த இடத்தில் புண் உண்டாகும். அப்படி வந்தால் ஒரு மேசைக்கரண்டி விளக்கெண்ணெயில் ஒரு சிட்டிகை மஞ்சள்தூள் சேர்த்து குழைத்து, புண் வந்த இடத்தில் பூசினால் புண் ஆறிவிடும். கால் ஆணியும் காணாமப்போயிடும்.

நீங்கள் இஞ்சிச் சாற்றுடன் சிறிதளவு நீர்த்த் சுண்ணாம்பைக் கலந்து கால் ஆணிக்கு மருந்தாகப் போட்டு வந்தால் கால் ஆணி நீங்கி விடும். 5 கிராம் மஞ்சள், 5 கிராம் வசம்பு, கைப்பிடி அளவு மருதாணி இலைகள் ஆகியவற்றை தண்ணீர் விட்டு அரைத்து, கால் ஆணி உள்ள இடத்தில் அடை போல் கனமாக வைத்து மேலே ஒரு வெற்றிலையை வைத்து, துணியினால் இறுகக் கட்டி விட வேண்டும். படுக்கும் முன்பு இதை செய்ய வேண்டும். தொடர்ந்து அரை மண்டலம் (20 நாள்கள்) வரை இவ்விதம் செய்தால் கால் ஆணி இருந்த இடம் தெரியாமல் மறைந்து விடும்.

குறிப்பு:


வைத்தியரின் ஆலோசனையின் பேரில் இதனைப் பின்பற்றவும்.

---

மூச்சுக்காற்று (சுவாச) இயக்கம் என்பது உயிருக்கு ஊட்டமளிக்கும் நிகழ்வாகும். இதனை முழுவதும் தடுத்தாலும் மூச்சியக்கம் இடைடையே தடைபட்டாலும் முறையான பயிற்சியில்லாமல் பிராணாயாமம் செய்தாலும் உயிர் ஆற்றல் (Life force) பாதிக்கப்படும்.

நலமாக வாழ்ந்து கொண்டுள்ள ஒருவர் வேண்டுமென்றே நீண்ட நேரம் மூச்சு இயக்கத்தை நிறுத்தமுடியாது. நீண்ட நேரம் மூச்சைத் தாமாகவே நிறுத்தினால் மயக்கம் ஏற்படும். மயங்கிய பின்னர் மூச்சியக்கம் தாமாகவே நிகழத் தொடங்கும். நீரில் அமிழ்தல், கழுத்து இறுகுதல் போன்ற நிலைமைகள் இருந்தால மட்டுமே இறப்பு நேரும்.

வாழும் இடத்திலும், பணி செய்யும் இடங்களிலும் போதுமான காற்றோட்டம்




இருக்குமாறு பார்த்துக் கொள்ளல் வேண்டும். போதுமான காற்றோட்டம் இல்லாமலிருப்பதும் வேறு பல காரணங்களால் ஆழ்ந்த மூச்சு இழுத்து விடாமலிருத்தலும் பாதிப்புகள் ஏற்படும்.

மூச்சியக்கம் தடைபட்டால் ஏற்படும் நோய்களைக் கீழ்க்கண்ட சித்தர் பாடல் விளக்குகின்றது.

**சுவாசத்தை யடக்கினாலோ தொடர்ந்திடுமிருமல்.நோயே**

**பவசமாய் வயிறு பொருமிப் பண்பினாக்கருசியாகிக்**

**கவசமாய்க் குலையிடிப்புக் காய்ச்சலும் வெட்டையாகித்**

**தவசமாய் வாயு தன்னில் தருங்குணமிவைகளாமே.**

சுவாசத்தை அடக்கினால் நுரையீரல் மற்றும் மூச்சுப் பாதை பாதிப்படைந்து இருமல் தொடரும்.

வயிறு பொருமல் ஏற்பட்டு வயிற்றில் காற்று அதிகம் சேர்ந்து வீங்கும். சீரண மண்டலம் பாதிக்கப்படும். நாக்கு சுவை அறியும் தன்மையை இழக்கும்.

வயிற்று வலி, உடல் வலி, காய்ச்சல் உண்டாகும்.

உடல்சூடு அதிகமாகி உள் உறுப்புக்களின் இயக்கம் சீர் கெடும்.

இதுவே இப்பாடலின் விளக்கம்.

**மூச்சு இயக்கம் தடைபடுவதால் ஏற்படும் துன்பங்கள்**

1. முதலில் மூளைக்குச் செல்லும் இரத்த ஓட்டம் குறைகின்றது. மூளையிலிருக்கும் பல இலட்சம் நரம்பு செல்களுக்கு போதுமான ஊட்டம் மற்றும் ஆற்றல் கிடைக்காமல் போவதால் அவற்றின் இயக்கம் குறையும். மீண்டும் காற்றுப் போதுமான அளவு கிடைத்தாலும் மூளை இயல்பு நிலையை அடைய நீண்டகாலமாகும்.

2. மூளையின் உயர் அறிவாற்றல் பாதிப்படைகின்றது. இதனால் முடிவெடுக்கும் தன்மை, ஒரு முகப்படுத்தும் தன்மை, புதிய உத்திகளை உருவாக்கும் தன்மை பாதிக்கப்படுகின்றன. மொழியறிவாற்றலும் குறைகின்றது.

3. ஆழ்ந்த மூச்சுவிட்டு வெளிவிடும்போது உடலில் உள்ள எதிர்வினையாற்றல் (Negative force) வெளியேறும். பிராண வாயு (Oxygen) உள்ளிழுக்கப்படுவது போன்று பிற நன்மை செய்யும் வாயுக்களும் (எடுத்துக் காட்டாக Nitric oxide) உடலிற்குள் செல்லும். உடலின் அமில-கார சமநிலை (Acid d base balance) பாதுகாக்கப்படும். இந்த நல்ல நிகழ்வுகள் தடுக்கப்படுவதால் சிறு பிரச்சனைகள் (தலைவலி, உடல்வலி) முதல் பெரிய நோய்கள் (cancer, heart diseases) வரை ஏற்பட வாய்ப்புள்ளது.

**வைத்தியர் செல்வசண்முகம்,**
M.D.(Siddha), Ph.D

4. நரம்பு மண்டலம் தளர்வடைகின்றது. நிலைத்தன்மை பாதிக்கப்பட்டு உடல் தடுமாற்றம் ஏற்படும்.

5. மூச்சுப்பதையில் உள்ள சிறு சிறு குழல்களும் சுருங்கி விரியும் தன்மை பாதிக்கப்படுகின்றது (rigid airway).

6. இரத்தக் குழாய்களின் சுருங்கி விரியும் தன்மை பாதிக்கப்படுகின்றது (Stiff blood vessels d Arteriosclerosis).

7. உடலின் அடிப்படை ஆற்றல் குறைவுபடுகின்றது.

என்வே எப்போதும் ஆழ்ந்து மூச்சு விடப் பழக வேண்டும். மூச்சுக்காற்று நுரையீரல் முழுவதும் நிரம்பினால் உயிர் ஆற்றல் வலுப்படும். இதற்கு வளி நிலைப் பயிற்சி எனப்படும் பிராணாயாமம் வழியாக இருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதைப்புனல்



## நீ முதல் நான் வரை

வெற்றி பெற
வாழ்த்துகிறேன்
வெளிப்படையாய்
கைகுலுக்குகிறேன்

வெற்றிபெற்று வருகையிலோ
உள்ளுக்குள் பொருமுகிறேன்
உதட்டளவில் பாராட்டுகிறேன்

என்னிலும் ஒருபடி
ஏறிவிடாதபடி
எச்சரிக்கையாய் இருக்கிறேன்

முட்டி மோதி
மூச்சுத் திணறுகையில்
குழிபறிக்க வழிபார்க்கிறேன்
முயன்று முன்செல்கையில்
குறிவைக்க வெறி கொள்கிறேன்

எல்லாரையும் விழுங்கி ஏப்பம் விடும்
இந்த மனித நாடகத்தில்
என் பாத்திரம் எம்மாத்திரம் ?
அதைமட்டும் ஏனோ
அவ்வப்போது மறந்துவிடுகிறேன்.

- சகாரா

## உரத்த பந்தங்கள்

எந்த உறவைச் சொல்லியும்
நூறு வீதம் உன்னை நீ
அடையாளப்படுத்த முடியாது
அம்மா என்று சொன்னால்
நீ மகனாகவும் இருக்கலாம்
மகளாகவும் இருக்கலாம்
மகன் என்று சொன்னால்
நீ அப்பாவாகவும் இருக்கலாம்
அம்மாவாகவும் இருக்கலாம்
அண்ணா என்று சொன்னால்
நீ தம்பியாகவும் இருக்கலாம்
தங்கையாகவும் இருக்கலாம்
தாத்தாவுக்கும் அப்படித்தான்
பாட்டிக்கும் அப்படித்தான்
பேரனுக்கும் அப்படித்தான்
பேத்திக்கும் அப்படித்தான்
மாமாவுக்கும் மாமிக்கும்
மருமகனுக்கும் மருமகளுக்கும்
சித்தப்பன் சின்னம்மா
அனைவருக்கும் அப்படித்தான்
காதலன் என்று நீ சொன்னால்
நிச்சயம் காதலி நீ
கணவன் என்று நீ சொன்னால்
நிச்சயம் மனைவி நீ
இரத்த பந்தங்களை விட
உன்னை அடையாளப் படுத்தும்
உரத்த பந்தங்கள் இவை

- மது மதி



## அவளின்றி உணர்வேது

என்னுள்ளம் அவள் மீது
இரங்கற்பா சூடியது
கன்னியவள் கண்டவுடன்
அணைத்து மகிழ்ந்தாள்
மனமது அவளிடம்
நாட்டம் கொண்டது
மனதோடு அவளும்
சேர்ந்து கொண்டாள்
நிலவு கூட
இன்று சிரிக்கும்
கனவு கூட
கவிதை எழுதும்

இயல்பு அதிகம்
அவளிடம் புன்னகை
இதய திருப்பம்
அவளோட பார்வை


கொடிகள் கூட
காற்றில் அசைந்திட
கோலமிட்ட மங்கை
நோக்கினாள்

கவிதை எழுதும்
எந்த மைந்தனும்
அவளை நினைத்து
பிரம்மாவாவான்

நிமிட முள்கள்
நெஞ்சை தீண்டுகிறது
நிஜத்தின் உணர்வுகள்
பேரலையாகிறது

அவளை அழைக்க
மனது ஏங்குகிறது
துயில் கனவிலும்
அவளின்றி
உயர்வேது

வே.வே. அகிலேஸ்வரன் ,
மருதங்கேணியூர்



## பழங்கள்

மனிதனின் மிகவும் பழைமையான உணவு பழம் தான். ஆதிகால மனிதனுக்கு மிகவும் இலகுவாகக் கிடைத்த உணவு பழம் மட்டுமே. பழங்களில் மனிதனுக்குத் தேவையான அனைத்து உயிர்ச்சத்துக்களும் கிடைத்துள்ளன. பழங்களில் நீர்ச்சத்து , விற்றமின்,தாது உப்புக்கள் மற்றும் நொதியங்கள் அனைத்தும் உள்ளன.

### கொய்யாப் பழம்

- கொய்யாப் பழத்தில் ' விற்றமின் சி ' உயிர்ச்சத்து அதிக அளவில் உள்ளது. வளரும் சிறுவர்களுக்கு ' விற்றமின் சி ' உயிர்சத்து எலும்புகளுக்கு பலத்தையும், உறுதியையும் அளிக்கின்றது. எனவே கொய்யாபழத்தை சிறுவர்கள் சாப்பிடலாம்.
- மலச்சிக்கல் இருப்பவர்கள் கொய்யாப் பழத்தை தொடர்ந்து சாப்பிட்டு வர பயன் கிடைக்கும்.
- சொறி, சிரங்கு, ரத்த சோகை இருப்பவர்கள் கொய்யாபழம் சாப்பிட்டு வர நோய் குணமடையும்.

### மாம்பழம்

- மாம்பழத்தில் 'விற்றமின் ஏ' உயிர்சத்து நிறைந்துள்ளது. இதனை சாப்பிட்டால் உடலில் ரத்தம் அதிகமாகி உடலுக்கு பலம் கிடைக்கும். உடலுக்கு நோய் எதிர்ப்பு சக்தியும் கிடைக்கும்.

### பப்பாளி

- வருடம் முழுவதும் கிடைக்கக்கூடிய பழம் இது. குறைந்த விலையில் கிடைக்கும். வீடுகளிலும் எளிதாக வளர்க்கக்கூடியது. இந்த பழத்திலும் 'விற்றமின் ஏ ' உயிர்ச்சத்து நிறைய உள்ளது.
- பல் சம்பந்தமான குறைபாட்டுக்கும், சிறுநீர்ப்பையில் உண்டாகும் கல்லை கரைக்கவும் பப்பாளி பழம் அருமருந்தாக பயன்படுகிறது.
- நரம்புகள் வலுவடையவும், ஆண்மைத்தன்மை பலப்படவும், ரத்த விருத்தி உண்டாகவும், ஞாபக சக்தியை அதிகரிக்கவும் பப்பாளி சாப்பிடலாம்.

### அன்னாசிபழம்

- அன்னாசி பழத்தில் 'விற்றமின் பீ உயிர்சத்து அதிக அளவில் உள்ளது. உடலில் ரத்தத்தை விருத்தி செய்யும். உடலுக்குப் பலத்தை தரும். பல வியாதிகளை குணப்படுத்தும் அரிய மருந்தாகவும் இருக்கிறது.
- நன்றாக பழுத்த அன்னாசி பழத்தை சிறு சிறு துண்டுகளாக வெட்டி வெயிலில் தூசிபடாமல் உலர்த்தி வற்றல்களாக செய்ய வேண்டும். பின்னர் இதைத் தினமும் படுக்கைக்குச் செல்வதற்கு அரை மணி நேரத்துக்கு முன்னதாக ஒரு டம்ளர் பாலில் ஐந்து அன்னாசி வற்றல்களை ஊற வைத்து, தொடர்ந்து 40 நாள்கள் சாப்பிட்டு வரவேண்டும். இவ்வாறு செய்தால் பித்தம் சம்பந்தமான கோளாறுகள் நீங்கும்.

### மாதுளம் பழம்

- இருமல் உள்ளவர்கள் தொடர்ந்து மூன்று நாள்களுக்கு மாதுளம் பழம் சாப்பிட்டு வந்தால் குணமாகும்.
- பித்தம் சம்பந்தமான அனைத்து உடல்நல குறைபாட்டுக்கும் மாதுளம் பழத்தை சாப்பிட்டு வந்தால் நல்ல பலன் கிடைக்கும்.

### வாழைப்பழம்

- மலச்சிக்கல் இருப்பவர்கள், மூலநோய் குறைபாடு இருப்பவர்கள் தினமும் வாழைப்பழம் ஒன்றைச் சாப்பிட்டு வந்தால் இந்தநோய்களில் இருந்து விடுபடலாம்.
- தினமும் இரவு உணவுக்குப்பின் ஒரு பழம் வீதம் சாப்பிட்டு வந்தால் நல்ல ஜீரண சக்தி உண்டாகும்.
- எந்த வயதினராக இருந்தாலும், கண் பார்வை குறைய ஆரம்பித்தவுடன் அவர்களுக்கு தினசரி உணவில் செவ்வாழைப்பழம் வேளைக்கு ஒன்று வீதம் 21 நாள்களுக்கு கொடுத்து வந்தால் கண் பார்வை கொஞ்சம் கொஞ்சமாக தெளிவடைய ஆரம்பிக்கும்.
- திருமணமாகி பல ஆண்டுகளாகியும் குழந்தை இல்லாத பெண்கள் செவ்வாழை பழத்தை தொடர்ந்து சாப்பிட்டு வந்தால் உடலில் உயிர் சக்தி அணுக்கள் போதுமான அளவில் பெருகி கருத்தரிக்க வாய்ப்பு ஏற்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீரின்றி அமையாது உலகு என்பதைப் போல, ஆண் இன்றி பெண்ணும், பெண் இன்றி ஆணும் உறவு அமையாது. உறவுகள் அற்ற வாழ்க்கை உவமைகள் அற்ற கவிதைகளை போல பெரியதாய் சுவைக்காது. ஒவ்வோர் ஆணின் வாழ்க்கையிலும் பெண் என்பவள் பல பாத்திரங்கள் கொண்டு பயணிக்கிறாள்.

அதில், தாய், தங்கை, தோழி, காதலி, மனைவி, மகள் போன்ற பாத்திரங்கள் தான் ஆணின் வாழ்கையை முழுமைப்படுத்து கிறது. இவர்கள் ஓர் ஆணின் வாழ்க்கையில் எவ்வளவு முக்கியமாக இருக்கிறார்கள், இவர்களது பங்கு ஆணின் வாழ்க்கையில் எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்துகிறது என்பதைப் பற்றி இனிக் காண்போம்..

**உலகம்**

தாய் என்பவள் ஓர் ஆணின் வாழ்கையில் மிகப்பெரிய பங்கு வகிக்கிறாள். இவ்வுலகிற்கு அறிமுகப்படுத்தியது மட்டுமின்றி, இவள் மூலமாகத் தான், உறவு களும் நமக்கு அறிமுகம் ஆகிறது.

**காவலன்**

ஓர் ஆண் முதன் முதலாக காவலனாக இருப்பது அவனது சகோதரிக்குத் தான். ஒவ்வொரு மகளின் முதல் ஹீரோ அப்பா என்றால், முதல் காவலன் அவளது சகோதரனாக தான் இருக்க முடியும்.

**பாடசாலை**

உறவினர், தாய், சகோதரிக்கு பிறகு ஓர் ஆணுக்கு கிடைக்கும் முதல் வெளியுலக பெண் உறவு, தோழி தான். ஓர் உண்மையான தோழியுடன் ஆண் தன் வாழ்க்கை




யின் அனைத்து சுக - துக்கங்களை யும் பகிர்ந்துக் கொள்கிறான். ஏனெனில், அந்த ஒரு தோழியி னால் தான் அவனது துக்கத்தை குறைக்கவும், சுகத்தை பெருக்கவும் முடியும்.

சிலருக்கு காதலி மனைவியாக அமைகிறார், சிலருக்கு மனைவி தான் காதலியாக அமைகிறார். ஏதோ ஓர் வகையில் அனைவருக் கும் ஓர் காதலி கிடைத்துவிடு கிறாள். ஒவ்வோர் ஆண்மகனின் பருவ வயது ஏக்கம் காதல். ஆனால் அது பதின்ம வயதைத் தாண்டியும் நிலைத்து நின்றால் மட்டுமே புனிதம் ஆகிறது. காதல் என்பது ஓர் ஆணின் வாழ்க்கையை சொர்க்கமாக்குகிறது (காதல் உண்மையாக இருப்பின் மட்டுமே).

**இல்வாழ்க்கை**

தன் பதியை நம்பி உடல், பொருள், ஆவியில் பாதி அங்கம் கொடுப்பவள் மனைவி. மனைவி தவறு செய்யும் போது கணவன் கண்டிப்பான்; அதே கணவன் தவறு செய்யும் போது மனைவி திருத்துவாள். இதுதான் கணவன், மனைவிக்கு இடையில் இருக்கும் வித்தியாசம். உண்மையிலேயே மனைவி அமைவதெல்லாம் இறைவன் கொடுத்த வரம் தான்.

**புதிய உலகம் மகள்**

ஒவ்வோர் ஆணின் வாழ்க்கையிலும், பெண்ணுடனான உறவு என்பது, ஒரு பெண்ணின் கருவறையில் தொடங்கி, மற்றொரு பெண்ணின் கருவறையில் முடிவடைகிறது. தாயின் கருவறையில் இருந்து இவ்வுலகில் தொடங்கி, மனைவியின் கருவில் இருந்து உதித்த, மகள் எனும் புதிய உலகம் என ஒவ்வோர் ஆணின் வாழ்க்கையிலும் இரண்டு உலகங்கள் இருக்கின்றன.

**கடைநிலை**

முதுமை எட்டிய பிறகு ஓர் ஆண் அதிகம் மனம் மகிழ்ந்து புன்னகைக்கிறான் எனில் அதற்கு முக்கிய காரணம் அவனது உயிரில் இருந்து ஜனித்த உயிரின் உயிராக தான் இருக்க முடியும். தாத்தா ஆரம்பித்து பேத்தி கேட்கும் விடைகளுக்கு ஏதேனும் ஓர் பதிலை அவன் கொடுத்துக் கொண்டே தான் இருக்கிறான்.

---

ஓர் ஆணின் கவர்ச்சியாக பெண் நினைப்பது எது என கேட்டால், அந்த கேள்விக்கான பதில் பெண்ணுக்கு பெண் வேறுபடும். சராசரியாக பெண்கள் ஆண் களின் கவர்ச்சியாக எதை நினைக்கிறார்கள்? அவர்களை கவர்வது எது, அவர்கள் எதிர் பார்ப்புகள் என்ன என ஆராய்ந்து, எனக்குத் தெரிந்த பல பெண்களின் கருத்துகளிலிருந்து,




ஓர் ஆணின் கவர்ச்சி என்ன? ஒரு பெண்ணின் கவர்ச்சி என்ன? என்பதற்கு பல ஆண்களின் பதில் ஒரே வரியில், ஒரே மாதிரியான பதிலாகயிருந்தாலும், 'ஆண்களின் கவர்ச்சி' என்ன என்பதை ஒரே வரியில் பதிலளிக்க இயலாது, ஏனென்றால் ஆண்களின் கவர்ச்சி யில் பல வகைகள் உள்ளன.

**நிறம்:**

ஒரு ஆண் சிவந்த மேனியாக இருக்க வேண்டும் என 'fair complexion' உள்ள பெண்கள் கூட எதிர் பார்ப்பதில்லை. ஒரு ஆணின் வசீகரம் அவனின் நிறத்தில் அல்ல என்பதே அதிக பெண்களின் கருத்து.

**முகத் தோற்றம்:**

ஆணின் நிறத்திற்கு முக்கிய த்துவம் கொடுக்காத பெண்கள் கூட, அவர் களின் 'மீசை'க்கு முக்கியத்துவம் கொடுக்கிறார்கள். 'மீசை' ஓர் ஆணுக்கு கம்பீரம் என்பது அவர்களின் கருத்து. மீசையை பிடிக்கும் பல பெண்களுக்கு ஏனோ தாடி' பிடிப்பதில்லை. காரணம் நம்மூர் ஆண்களுக்கு 'தாடி வள ர்த்தால் அதை ஒழுங்காக பராமரிக்கத் தெரிவதில்லை என்பது தான். சரியாக பராமரிக்காமல் காடு மாதிரி வளர்ந்த தாடி ஒரு ஆணை சோகமாகவும், நோய்வாய்பட்டது போலவும் தோற்ற மளிக்கச் செய்துவிடும்.

**உடை அலங்காரம்:**

பொதுவாக பெண்கள் தங்கள் உடை அலங்காரத் திற்கு அதிக அக்கறை எடுத்துக் கொள்வார்கள். அதனால் நல்ல 'ட்ரெஸ்ஸென்ஸ்' ஆணிடமும் எதிர்பார்க்கிறார்கள். 'ஜீன்ஸின்' நிறத்திற்கு கொஞ்சம் கூட சம்பந்தமே இல்லாத கலரில் ஷேர்ட் அணிவது, சரியான அளவில் ஷேர்ட் போடாமல், தொழ தொழ என நீளமான ஷேர்ட் அணிவது, போன்றவை பெண்களுக் கு பிடிப்பதில்லை. இன்றைய ஆண்களின் கவர்ச்சி உடை யாக அதிக பெண்கள் கருதுவது ஜீன்ஸ் - டி ஷர்ட். இடத்திற்கு தகுந்தால் போல் உடை அணிய வேண்டும். சுத்தமான, நல்ல 'கலர் சென்ஸ்'டன் உடை அணிந்தால் பெண்களின் மனதில் சீக்கிரமாக இடம் பிடித்து விடலாம்.

**பேச்சுத் திறன்:**

முதன் முறையாக ஒரு பெண்ணிடம் பேசும்போது, லொட லொட வென சொந்தக் கதை, சோகக் கதை எல் லாம் பேசக்கூடா து. அதே சமயம் அந்த பெண்ணிட மும் அவளை பற்றின சொந்த விஷயங் களை நோண்டி நோண்டி கேட்க கூடாது. அவளுக்கு ம் பேச சந்தர்ப்பம் கொடுத் து, அவள் பேசும் போது கூர்ந்து கவனிக்க வேண்டும். (அவள் முகத்தை மட்டும்!). முதல் நாளிலேயே பெரும்பான்மையான பெண்கள் நன்றாக பேசி பழகமாட்டார்கள், அதனால் அவர்கள் பேசும் ஓரிரு வரிகளிலிருந்தே உங்கள் உரையாடலை வளர்த்துக் கொள்வது உங்கள் சாமர்த்தியம்.

இவை அனைத்தும் பல பெண்களின் சில சில எதிர் பார்ப்புகளே. ஏற்கனவே சொன்ன மாதிரி எதிர்பார்ப்பு களும், ஆசைகளும் பெண்ணுக்கு பெண் வேறுபடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆரோக்கியமான சமையலறை

சமையலறை என்பது வீட்டுக்கு முக்கியமானது. சுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டிய பிரதான இடம். சமையலறையை வைத்து தான் நம் குடும்பத்தின் ஆரோக்கியம் அமையும். அந்தக் கால சமையல் அறைகள் விசாலமானதாக இருந்தன. சிறிய வீடுகள் கூட ஓரளவு புழங்குவதற்கு வசதியாக இருந்தன. ஆனால் இன்றைக்குள்ள சமையலறைகள் அவ்வளவு போதுமானதாக இல்லை.

அந்தகாலச் சமையலறைகள் ஒரு விதத்தில் அசவுகரியமானவை. அதாவது பாத்திரங்களை கழுவும் அங்கணம், அம்மி போன்றவை கீழே அமைந்திருக்கும். அதாவது குனிந்து நிமிர்ந்து வேலை பார்க்க வேண்டிருக்கும். இந்த கால சமையலறைகள் ஓரளவுக்கு வசதியாக நின்றபடி வேலைகளை வேகமாக செய்து முடிக்க முடியும். இப்போது சமையலறையின் இட நெருக்கடிகளை எப்படி முடிக்கலாம் எனப் பார்ப்போம்.

சின்ன மாற்றங்களைச் செய்ததாலே போதுமானது . அதாவது சமையலறையில் தேவையில்லாத பொருட்களை தேக்கி வைக்காதீர்கள். அதுவே இடத்தை அடைத்து கொள்ளும். குறிப்பாக, நெய் வாங்கிய டப்பாக்களை காலியான பின்பு அதை சமையலறையிலேயே தேக்கி வைத்திருப்போம். அது இடத்தை அடைத்துக் கொண்டு சமையலறையை குப்பை கூடமாக மாற்றிவிடும். இது போல பல சின்னச் சின்ன பொருட்கள் தேவை இல்லாமல் சமையலறையை அடைத்துக் கொண்டிருக்கும். வாங்கிய பொருள்களை உடனே வெளியே போடமாட்டோம்.

உதாரணமாக, உணவுக்கடையில் இருந்து வாங்கி வந்தால், அந்த உணவுப்பொருள் அடைத்துக் கொடுக்கப்பட்ட டப்பாக்களை கழுவி சமையலறையில் வைத்துவிடுவோம். இம்மாதிரி பிளாஸ்டிக் டப்பாக்களை மறு உபயோகப்படுத்துவது சிறந்தது தான். ஆனால் இவை பெரும்பாலும் பயன்படுத்தப் படுவதில்லை. இப்படிப் பயன்படுத்தாமல் வைப்பதற்குபதிலாக, இவற்றை வீட்டின் மற்றொரு அறையில் சேகரித்து மொத்தமாக சேர்ந்த பின், பழைய பொருட்கள் வாங்கும் கடையில் விலைக்கு போட்டு விடலாம்.

அதேபோல், ஒரே பொருட்களை பல ஜாடிகளில் போட்டு வைத்திருப்போம். இதை தவிர்த்தால் இடம் மிச்சமாகும். மேலும், நவீன சமையலறைகளில் உள்ளது போல, கீழே அலுமாரிகள் அமைத்து அவற்றில் சாப்பிடும் தட்டுக்கள், கரண்டிகள் உள்ளிட்ட அனைத்து சமையல் பாத்திரங்களையும் வைத்துக் கொள்ளலாம்.

# நண்டுப் பொரியல்



### தேவையான பொருட்கள்

1. பெரிய நண்டு - 5 (விருப்பப்படி)
2. மிளகாய் வற்றல் - 8 (விருப்பப்படி)
3. சீரகம் -1 தேக்கரண்டி
4. வெங்காயம் - 6 (விருப்பப்படி)
5. மல்லி -2 தேக்கரண்டி
6. கடுகு -1 தேக்கரண்டி
7. தேங்காய்பூ 4 தேக்கரண்டி
8. உப்பு -தேவையான அளவு.

### செய்முறை

1. நண்டுகளைத் துண்டுகளாக்கி மஞ்சள் கலந்த நீரில் சிறிது நேரம் ஊற வைத்துப் பின்னர் கழுவிச் சுத்தம் செய்து வைக்கவும்.
2. மிளகாய் வற்றல், மல்லி, சீரகம், கடுகு, நறுக்கிய வெங்காயம், தேங்காய்த் துருவல் ஆகியவற்றைச் சேர்த்து விழுதாக அரைத்துக் கொள்ளவும்.
3. சுத்தம் செய்த நண்டுடன் உப்பு, மஞ்சள் தூள், அரைத்து வைத்திருக்கும் விழுது ஆகியவற்றைப் போட்டு பிரட்டி ஊற வைக்கவும்.
4. வாணலியில் எண்ணெய் ஊற்றிக் காய்ந்ததும், அதில் ஊற வைத்திருக்கும் நண்டைப் போட்டு சிவக்கப் பொரித்தெடுக்கவும்.


# பெண்கள்




குடிகார கணவனின்
உளறலில்
வாழ்கையை
புரிந்து கொள்ள
முடியாமல்
தள்ளாடும்
பெண்கள் !!!!!1
சந்தேக
கணவனின்
கேள்விக்கு
பதில் தேடி
வாழ்கையை
தொலைக்கும்
பெண்கள்!!!!!
சில முடிச்சுக்களை
போட்டு
பல விபரீத
முடிவுகளை
தருவதுதான்
திருமணமோ????

இளையராணி

# தன்னம்பிக்கையான பெண்ணா நீங்கள்?



நாம் அனைவருமே எடுத்துக் கொண்ட காரியத்தில் வெற்றி பெற வேண்டும் என்றே விரும்புகிறோம். ஆனால், அனைவராலும் வெற்றி பெறமுடிவதில்லை. இந்த காரியத்தில் ஏன் என்னால் வெற்றி பெற இயலவில்லை என்று பலரும் யோசிப்பதில்லை; மாறாக, அவ்வளவு தான் என் விதி என்று விட்டுவிடுகிறோம். ஆசை மட்டும் இருந்தால் வெற்றி கிட்டாது. ஆசையுடன் சில செயல்களையும் மேற்கொண்டால் மட்டுமே வெற்றி கிட்டும். அதற்கு செய்ய வேண்டியன என்ன என சில ஆலோசனைகளைப் பார்ப்போம்.

நாம் எடுத்துக் கொண்ட காரியத்தில் வெற்றி பெற ஆசையுடன் விடாமுயற்சியும், நம்பிக்கையும் தேவை. அந்த நம்பிக்கை, என்னால் நிச்சயம் இந்தக் காரியத்தை முடிக்க இயலும் என்ற மனஉறுதியுடன் அமைய வேண்டும். அப்படி இருந்தால் மட்டுமே நீங்கள் திறமை உள்ளவராக இருந்தாலும் கூட உங்களால் வெற்றி பெற இயலும்.

பிரச்சினைகள் வரும் போது, நான் இவ்வளவுதான், இது என் விதி என்று மனம் தளரக் கூடாது. மாறாக, என்னால் முடியும் என்ற தன்னம்பிக்கை இருக்க வேண்டும். அப்படி. நம்பினால், நீங்கள் புதியவளாக மாற முடியும். அந்த தன்னம்பிக்கை தோல்வியுறுபவர்களை, வெற்றியாளராக்கும்; சோம்பேறிகளை சுறுசுறுப்பானவர்களாக மாற்றும்.

உங்கள் இலக்கை தெளிவாக வைத்துக் கொள்ளுங்கள். அந்த இலக்கை நேர்மறையான எண்ணங்களும், நம்பிக்கைகளும் சூழ்ந்திருக்க வேண்டும். பின், ஆக்கபூர்வமாக அதை தொடர்ந்து செய்யும் போது உங்களால் வெற்றி அடைய முடியும்.

தன்னம்பிக்கையும் தைரியமும் நீங்கள் நினைக்கும் எண்ணங்களோடு இணைந்திருக்கும் போது உங்களுக்கு வெற்றி நிச்சயம். மாறாக, எதிர்மறையான எண்ணங்களை வளர்த்துக் கொண்டால், விளைவும் மோசமானதாகத்தான் இருக்கும். ஏனென்றால், உங்கள் ஆழ்மனம், உங்கள் எண்ணங்கள் அனைத்தையும் ஏற்றுக் கொள்கிறது. ஆழ்மனத்துக்கு நீங்கள் எதை அனுப்புகிறீர்களோ, அதையே உங்களுக்குத் திருப்பி அனுப்புகிறது. உதாரணமாக, தாழ்வுணர்ச்சி, பயம் போன்றவற்றை நீங்கள் வளர்த்துக் கொள்ளும் போது. அது உங்கள் ஆழ்மனதினுள் சென்று அதையே திரும்ப அனுப்புகிறது. ஆக, நீங்கள் உங்கள் மனதினுள் அனுப்புவதையே பெறுகிறீர்கள். எனவே, மனதை உங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து, அதில், ஆரோக்கியமான, ஆக்கப்பூர்வமான, தைரியமான எண்ணங்களால் நிரப்புங்கள். வெற்றி நிச்சயம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரசிக்க வைக்கும் 'தென்னிந்தியன்'



சரத்குமார் ஒரு நேர்மையான பொலிஸ் அதிகாரி. இவர் சிறுவயதில் தன்னுடைய அப்பாவை கொன்ற ரவுடியான சுரேஷை கொல்வதற்காகவும், ரவுடியிசத்தை அடியோடு ஒழிக்கவேண்டும் என்ற லட்சியத்துடனும் பொலிஸ் வேலையைச் செய்து வருகிறார்.

இந்த நிலையில், சுரேஷ் இருக்கும் இடத்துக்கு பொலிஸ் அதிகாரியாக பணி மாற்றம் கேட்டு வருகிறார். சுரேஷை கைது செய்ய சரியான தருணம் பார்த்து காத்திருக்கிறார். ஆனால், சுரேஷோ எம்.பி., கமிஷனர் ஆகியோரின் ஆதரவோடு அந்த இடத்தில் மிகப்பெரிய ஆளாக வளர்ந்து நிற்கிறார். இதனால், அவரைத் தகுந்த ஆதாரங்களுடன் கைது செய்ய சரத்குமார் காத்திருக்கிறார்.

மறுமுனையில், வெளிநாட்டில் இருந்து சொந்த ஊருக்கு வரும் நிவின் பாலி, தனது நண்பர்களுடன் வெளியூருக்கு சுற்றுலா செல்கிறார். அங்கு ரவுடிகளிடம் மாட்டிக்கொள்ளும் பாவனாவைக் காப்பாற்றுகிறார். இதனால் கோபமடைந்த அந்த ரவுடி கும்பலின் தலைவனான சுரேஷின் தம்பி, நிவின் பாலி மற்றும் அவரது நண்பர்களை கொல்ல முடிவு செய்கிறார்.

இது தெரியவந்ததும் நண்பர்கள் உடனே அங்கிருந்து புறப்படத் தயாராகிறார்கள். ஆனால், இவர்கள் சென்ற கார் பழுதடையவே அங்கிருந்து கிளம்ப முடியாமல் தவிக்கின்றனர்.

இந்த நிலையில், தன்னைக் காட்டிக் கொடுத்ததாக கூறி தனது கூட்டாளி ஒருவனை சுரேஷ் கொலை செய்வதை, நிவின் பாலியின் நண்பர்களில் ஒருவன் செல்போனில் படம்பிடித்து விடுகிறான். இதை பார்க்கும் சுரேஷ், அவர்களை பிடிக்க முயற்சி செய்கிறான். அப்போது, அவனிடமிருந்து நண்பர்கள் அனைவரும் தப்பித்து செல்கிறார்கள்.

கொலை செய்ததை படம் பிடித்த நண்பர்களை கொல்ல சுரேஷும் அவர்களை தேடி அலைகிறான். இறுதியில் நிவின் பாலி மற்றும் அவரது நண்பர்களின் கதி என்ன? சரத்குமாரின் லட்சியம் நிறைவேறியதா? என்பதே மீதிக்கதை.

சரத்குமார் தனக்கே உரிய பாணியில் மிடுக்கான பொலிஸ் அதிகாரியாக படம் முழுக்க வலம் வருகிறார். 'ஆக்ஷன்' காட்சிகளிலும் அனல் பறக்க விடுகிறார். பாவனா, படத்தில் சில காட்சிகளே வந்தாலும், கொடுத்த வேலையை சரியாக செய்திருக்கிறார்.




நாயகன் நிவின் பாலி 'அக்ஷன்' கலந்த யதார்த்தமான நடிப்பை வெளிப்படுத்தியிருக்கிறார். படத்தில் இவருக்கு 'டூயட்' காட்சிகள் கிடையாது. இவருடைய நண்பர்களாக வருபவர்களும் அழுத்தமான நடிப்பை வெளிப்படுத்தியிருக்கிறார்கள்.

வில்லனாக வரும் சுரேஷ், வில்லத்தனத்துடன் சிறப்பாக நடித்திருக்கிறார். கேரளா பின்னணியில் அழகான 'அக்ஷன்' கதையை எடுத்திருக்கிறார் இயக்குனர் பிபின் பிரபாகர். மலையாளத்தில் வெளிவந்த 'தி மெட்ரோ' படத்தின் தமிழில் மொழிமாற்றம் செய்து வெளியிட்டிருக்கிறார்கள். தமிழிலும் ரசிக்கும்படி இந்தப் படத்தை எடுத்திருப்பதுதான் சிறப்பு.

மூன்றுவிதமான கதையை கூறினாலும், கதையில் விறுவிறுப்பு குறையாமல் அழகான திரைக் கதை அமைத்திருக்கிறார். கிளை 'மாக்ஸ்' காட்சியை யாரும் எதிர்பார்க்க முடியாதபடி வைத்திருப்பது சிறப்பு.

ஷான் ரகுமான் இசையில் பின்னணி இசை சிலிர்க்க வைக்கிறது. ஒருசில பாடல்கள்தான் என்றாலும் ரசிக்க வைக்கின்றன. ஸ்ரீராம் ஒளிப்பதிவு படத்தின் கதைக்கு மெருகேற்றியிருக்கிறது.

மொத்தத்தில் 'தென்னிந்தியன்' பார்த்து இரசிக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இவ்வார இராசி பலன்

**30.12.2015 –05.01.2016**

### மேஷம்

**அச்சுவினி, பரணி, கார்த்திகை 1ஆம் பாதம்**

நீண்ட நாள் எதிர்பார்ப்பும் நிறைவேறும். நல்லோரின் அன்பும், ஆசியும் கிடைக்கும். வாகன வகையில் பராமரிப்பு செலவு ஏற்படும். பிள்ளைகளின் செயல்பாடு கண்டு பெருமை கொள்வீர்கள். மனைவியின் ஆலோசனை, வளர்ச்சிக்கு வழிவகுக்கும். தொழிலில் உற்பத்தி சிறக்கும். விற்பனை அதிகரிப்பதால் வருமானம் பன்மடங்கு உயரும். பணியாளர்கள் எதிர்பார்த்த சலுகை கிடைக்கும்.

### ரிஷபம்

**கார்த்திகை 2, 3, 4ஆம் பாதங்கள்**

வருமானத்திற்கான புதிய முயற்சி வெற்றி பெறும். வாகன பயணத்தில் மிதவேகம் கடைபிடிப்பது நல்லது. புத்திரரின் பிடிவாதத்தால் சங்கடம் உருவாகும். உடல்நலனில் அக்கறை தேவை. சத்து நிறைந்த உணவு உண்பது அவசியம். மனைவியின் செயலால் குளறுபடிக்கு ஆளாக நேரிடும். தொழில், வியாபாரத்தில் முயற்சிக்கேற்ற முன்னேற்றம் உண்டாகும். பணியாளர்கள் எதிர்பார்த்த கடனுதவி கிடைக்கப் பெறுவர். பெண்களுக்கு பாதுகாப்பு விஷயத்தில் கவனம் தேவை.

### மிதுனம்

**மிருகசீரிடம் 3, 4ஆம் பாதங்கள்**

தாய் வழி உறவினர்களால் உதவி கிடைக்கும். வாகன பயணத்தின் மூலம் இனிய அனுபவம் ஏற்படும். பிள்ளைகள் உங்களின் சொல்லுக்கு மதிப்பளிப்பர். பணக்கடன் தீரும். மனைவி பாசத்துடன் நடந்து கொள்வார். தொழில், வியாபாரத்தில் மந்த நிலை விலகி லாபம் அதிகரிக்கும். பணியாளர்கள் அக்கறையுடன் பணியாற்றி நற்பெயர் காண்பர். பெண்களுக்கு தாய்வீட்டுச் சீதனம் கிடைக்கும். மாணவர்கள் ஞாபகத்திறன் சிறப்பதால், கல்வியில் முன்னேறுவர்.

### கடகம்

**புனர்பூசம் 4ஆம் பாதம், பூசம், ஆயிலியம்**

திதாக வீடு, வாகனம் வாங்க யோகம் உண்டு. புத்திரரின் எதிர்கால நலனுக்கு தேவையான பணிகளை மேற்கொள்வீர்கள். எதிரியும் உங்களிடம் மறைமுக உதவிபெற முயற்சிப்பார். மனைவியின் ஆலோசனையால் நன்மை ஏற்படும். தொழில், வியாபாரத்தில் வருமானம் சராசரி அளவில் இருக்கும். பணியாளர்கள் விழிப்புடன் பணியாற்றுவது நல்லது. பெண்களின் மனதில் பக்தி மேலோங்கும். மாணவர்கள் விருப்பமுடன் படிப்பர். போட்டியில் பங்கேற்று பரிசு பெறுவர்.

### சிம்மம்

**மகம், பூரம், உத்திரம் 1ஆம் பாதம்**

சத்தான உணவு, சீரான ஓய்வு அவசியம். அறிமுகம் அற்றவர்களுக்கு வீடு, வாகனத்தில் இடம் தர வேண்டாம். பிள்ளைகள் வளர்ச்சியில் கவனம் செலுத்துவீர்கள். மனைவியின் சொல்லும், செயலும் மனதிற்கு ஆறுதல் அளிக்கும். தொழில், வியாபார மேம்பாட்டில் கவனம் செலுத்துவீர்கள். பணியாளர்கள் நிர்வாகத்தினரின் சட்டதிட்டத்தை மதித்து நடக்கவும்.

### கன்னி

**உத்திரம் 2, 3, 4ஆம் பாதங்கள்**

உறவினர் விஷயத்தில் குறை காண்பதை தவிர்க்கவும். மனைவி விரும்பிய பொருள் வாங்கித் தருவீர்கள். தொழில், வியாபாரத்தில் அதிக மூலதனம் தேவைப்படும்; லாபம் கூடும். பணியாளர்கள் பணியிலக்கை விரைந்து முடிப்பர். பெண்கள் யாருக்கும் நகை இரவல் கொடுக்க, வாங்க வேண்டாம். மாணவர்கள், படிப்புடன், கலைத்துறையிலும் ஆர்வம் கொள்வர்.

### துலாம்

**சித்திரை 3, 4ஆம் பாதங்கள்.**

குடும்பத்தில் ஒற்றுமை சிறக்கும். வெளியூர் பயணம் பயன் அறிந்து மேற்கொள்வது நல்லது. புத்திரர்களின் முன்னேற்றம் கண்டு மனம் மகிழ்வீர்கள். இஷ்ட தெய்வ வழிபாட்டில் ஈடுபடுவீர்கள். மனைவி வழி உறவினர்களின் உதவி கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் மிதமான லாபம் கிடைக்கும். பணியாளர், பணியில் மட்டும் கவனம் செலுத்துவது நல்லது. பெண்கள் வீட்டு உபயோகப் பொருள் வாங்குவர். மாணவர்கள், பெற்றோர் மகிழும் விதத்தில் படிப்பர்.

### விருச்சிகம்

**விசாகம் 4ஆம் பாதம், அனுஷம், கேட்டை**

குடும்பத்தில் ஒற்றுமை பெருகும். வீடு, வாகன பாதுகாப்பில் கவனம் செலுத்தவும். பிள்ளைகள் அறிவில் மேம்படுவர். எதிரியின் கெடு செயல் பலமிழந்து போகும். மனைவியின் செயல்களில் குறை காண வேண்டாம். தொழில், வியாபாரத்தில் மிதமான லாபம் கிடைக்கும். பணியாளர்கள் பணிச்சுமைக்கு ஆளாகலாம். பெண்கள் குடும்ப நலனில் அக்கறை கொள்வர். மாணவர்கள் படிப்பில் முதலிடம் வகிப்பர்.

### தனுசு

**மூலம், பூராடம், உத்திராடம் 1ஆம் பாதம்**

வாகன பயணம் மகிழ்ச்சியை ஏற்படுத்தும். பிள்ளைகளின் எதிர்கால நலனில் அக்கறை கொள்வீர்கள். எதிரி தொல்லை மறையும். மனைவியின் அன்பைப் பெறுவீர்கள். தொழில், வியாபாரத்தில் மூலதனத்தை அதிகப்படுத்தி லாபம் காண்பீர்கள். பணியாளர்கள், நிர்வாகத்தினரின் நன்மதிப்பை பெறுவர். பெண்கள் குடும்ப நலனில் கவனம் செலுத்துவர். மாணவர்கள் தனித்திறனில் மேம்படுவர்.

### மகரம்

**உத்தராடம் 2,3,4ஆம்பாதங்கள்.**

புத்திரரின் நற்செயல் மனதை மகிழ்விக்கும். உடல் நலத்திற்கு மருத்துவ சிகிச்சை தேவைப்படலாம். மனைவியின் பாராட்டைப் பெற்று மகிழ்வீர்கள். தொழில், வியாபார வளர்ச்சிக்கு புதியவர்களின் ஆதரவு கிடைக்கும். பணியாளர்களுக்கு எதிர்பார்த்த சலுகை கிடைக்கும். பெண்கள் பிறருக்காக பணப்பொறுப்பு ஏற்க வேண்டாம். மாணவர்கள், படிப்பில் கூடுதல் அக்கறை செலுத்துவது நல்லது.

### கும்பம்

**அவிட்டம் 3,4 ஆம் பாதங்கள்.**

புத்திரரின் விருப்பம் அறிந்து நிறைவேற்றுவீர்கள். நிலுவைப் பணம் வசூலாகும். மனைவியின் மனதில் நம்பிக்கைக் குறைவு நேராமல் பார்த்துக் கொள்ளவும். தொழில், வியாபாரத்தில் இடையூறு விலகுவதால் லாபம் அதிகரிக்கும். பணியாளர்கள் திறம்பட பணியாற்றி, நிர்வாகத்தின் பாராட்டைப் பெறுவர். பெண்கள் மகிழ்ச்சிகரமான வாழ்வு நடத்துவர். மாணவர்கள் படிப்பில் மேம்படுவர்.

### மீனம்

**பூரட்டாதி 4ஆம் பாதம், உத்திரட்டாதி, ரேவதி**

புத்திரரின் செயல்பாட்டால் குளறுபடி ஏற்படலாம். குடும்பச் செலவு அதிகரிக்கும். உடல்நலனில் அக்கறை கொள்வது அவசியம். மனைவியின் செயல்பாடு நிம்மதிக்கு வழிவகுக்கும். தொழில், வியாபாரத்தில் மிதமான லாபம் உண்டாகும். பணியாளர்களுக்கு, எதிர்பார்த்த கடனுதவி கிடைக்கும். பெண்கள் குடும்ப நலனுக்காகப் பாடுபடுவர். மாணவர்கள் முயற்சியுடன் படிப்பது நல்லது.

# சுதந்திர வேட்கை

அடேல் பாலசிங்கம்

## விடுதலைப் போராட்டம் பற்றிய ஒரு பதிவு

**117**



படையினருக்குக் கிடைத்த அதேயளவு சேதம் இந்திய உலங்கு வானூர்திகளுக்கும் கிடைத்தன. ஏற்கனவே வந்திறங்கி விடு தலைப்புலிகளின் தொடர் துப்பாக்கி வேட்டுக்கு முகம் கொடுத்துக் கொண்டிருந்த இந்தியப் படையினருக்கு உதவியாக மேலும் படையினரைக் கொண்டு வந்து இறக்க உலங்கு வானூர்தி களுக்கு இயலாது போயிற்று. வந்திறங்கிய இந்தியப் படையினர் சுற்றவளைத்து தனியாக்கப்பட்டனர். ஒக்ரோபர் 12 ஆம் திகதி யன்று தங்கள் கடைசித் துப்பாக்கிரவை தீர்ந்த முன் மதியம்வரை தங் கள் உயிருக்காக அவர்கள் போராடினார்கள். உயிர் தப்ப முனை யும் இறுதி முயற்சியாக கூர்முனைக் கத்தியால் குத்தும் தாக்கு தலிலும் ஈடுபட்டார்கள். இந்த நடவடிக்கையின் படுதோல்வி வர லாறு கூறுவதற்காக ஒரேயொரு இந்தியப் படையினரே உயிர் தப்பி னார். சிறப்புப் பயிற்சி பெற்ற சீக்கிய அதிரடிப்படையினர் இருபத்தி யொன்பது பேர் இந்தச் சமரில் கொல்லப்பட்டார்கள்.

அதேசமயம், வான்குடைப் பயிற்சி பெற்ற அதிரடிப்படையினர், சீக்கியப் படையணியிலிருந்து பிரிந்து பிரபாகரனை அழித்தொ ழிக்கும் இராணுவ இலக்கை மட்டும் தங்கள் தனி இலக்காகக் கொண்டு அவர் இருந்த இடத்தை குறியாக வைத்து நரகத் தொடங்கினர். அவருடைய தலைமைப் பணிமனையை அவர் கள் சென்றடைந்தபோது, இந்திய நடவடிக்கை தொடங்குவதற்கு சில மணிநேரம் முன்னதாக அவர் வெளியேறிவிட்டதைக் கண்டறிந்தார்கள். மட்டுமீறிய நம்பிக்கை யோடும் தவறான கணிப் போடும் நடத்தப்பட்ட இந்த இராணுவ நடவடிக்கை, தமிழ்ப் பொது மக்களுக்கு எதிராகப் புரியப்பட்ட மிக மோசமான கொடூர சம்பவமாக வரலாற்றில் பதியப்பட்டிருக்கிறது. முற்றுகைக்கு உள்ளாகி முழி பிதுங்கி நின்ற இந்திய அதிரடிப் படையினர், தமக்கு பரிச்சயம் அற்ற ஒரு சூழலில் தாம் யாரைத் தேடிச் செல்கிறார்களோ, அவரை முன்பின் பார்த்தறியாத நிலையில், தமது இராணுவத் தாக்குதல் இலக்குகள் அகப்பட்ட தமிழ்ப் பொதுமக்க ளையும் ஈவிரக்கமின்றி சுட்டுக் கொன்றார்கள். திணறிக்கொண்டிருந்த அதிரடிப்படையினருக்கு உதவியாக ஏவப்பட்ட மோட்டார், பீரங்கி எறிகணைகளும், பொது மக்கள் பலரைப் பலியெடுத்தது. அருகே அமைந்திருந்த யாழ்ப்பாணத்துக் கோட்டையில் இருந்து புறப்பட்ட கனரக டாங்கி வண்டி கள், எதிர்ப்பட்ட பொதுமக்களைப் புல்லை நெரிப்பதுபோல் அரைத் துச் சென்றன.


இந்தியப்படைகள் அநாவசியமாக இரத்த வெறியாடி படுகொலைக் களத்தை விட்டு அகன்றபின், நெரியலில் பிய்ந்த உடலது துண் டங்களும், துப்பாக்கிச் சல்லடையிட்ட சடலங்களும் அந்தப் பகுதி யில் இறந்து கிடந்தன. இந்தக் கண்மூடித்தனமான இராணுவ நடவடிக்கை யால் மொத்தம் நாற்பது தமிழ்ப் பொதுமக்கள் உயிரிழந்தார்கள்; பெருந்தொகையினர் காயமடைந்தார்கள்.

பவான் இராணுவ நடவடிக்கை தொடர்ந்தது; தீவிரமடைந்தது. தீபகற்பத்து வலிகாமப் பகுதியில் மக்கள் அடர்த்தியாக வாழ்ந்த பகுதி மீது பீரங்கிச் ஷெல் அடிகள் மழைபோல பொழிந்தன. சொத்துக்களைச் சிதறடித்து கற்குவியல் ஆக்கின. மக்களைத் துண்டம் துண்டமாகச் சிதறடித்தன. பலரை நிரந்தர ஊனமானவர்கள் ஆக்கின.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க்கைத் தத்துவம்



துறவி ஒரு நாள் தனது சீடர்கள் அனைவரையும் அழைத்தார்.

அவர் தனது சீடர்களிடம். சீடர்களே... என் வாழ்வு இன்னும் சில நாட்களில் முடிந்து விடும். நான் உங்களுக்கு வாழ்க்கைத் தத்துவத்தைச் சொல்ல விரும்புகிறேன்... என்றார்.

சீடர்கள் அனைவரும் அவர் என்ன சொல்லப் போகிறார்? என்பதைக் கேட்க ஆர்வமாக இருந்தனர்.

அவர் பல் எதுவுமில்லாத தனது பொக்கை வாயைத் திறந்து காண்பித்து. இதுதான் வாழ்க்கைத் தத்துவம் என்று சொல்லிவிட்டு அனைவரையும் அங்கிருந்து போகச் சொல்லி விட்டார்.

சீடர்களுக்கு ஒன்றும் புரியவில்லை.

ஒரே ஒரு சீடனுக்கு மட்டும் தனது குரு பொக்கை வாயைத் திறந்து காண்பித்து. இதுதான் வாழ்க்கைத் தத்துவம் என்று சொன்னது சிறிதும் விளங்கவில்லை... பொக்கை வாய்க்குள் அப்படியென்ன வாழ்க்கைத் தத்துவம் இருந்து விடப் போகிறது என்று அவன் மிகவும் குழம்பிப் போனான். நாளை குருவிடமே இதைப் பற்றிக் கேட்டு விட வேண்டும் என்று அவன் முடிவு செய்து கொண்டான்.

மறுநாள் அவன் குருவைச் சந்தித்து தனது சந்தேகத்தைக் கேட்டான்.

குரு மீண்டும் அவரது பொக்கை வாயைத் திறந்து காண்பித்தார்.

பின்னர் அந்தச் சீடனிடம். என் வாய்க்குள் என்ன இருந்தது...? என்று கேட்டார்.


சுவாமி. தங்கள் வாய்க்குள் நாக்கும் உள்நாக்கும் இருந்தன என்றான் அவன்.

பல் இருந்ததா?

இல்லை...

அதுதான் வாழ்க்கை... வன்மையானது அழியும்... மென்மையானது வாழும்... இதுதான் நம் வாழ்க்கை...!


**- சித்ரா**



# உன் பெருமை


நிலவு வருது நிலவு வருது
நீல வானில் மிதந்து வருது
உலவும் அதன் முகத்திலே
கலையாய் இருக்கு ஒரு மச்சம்
பார்ப்போர் கண்கள் பரவசத்தில்
பரவும் சோதி முகத்தினிலே
தன்னிகரில்லா தண்ணிலவு
தன்னலமில்லா தகையழகு
ஊருக்கெல்லம் ஒளி கொடுக்கும்
உயர்ந்த திருவுளம் கொண்டதது
அம்புலி நீயோ இருக்குமிடம்
அறியோம் எங்கும் சுற்றிடுவாய்
குடிசைக்கிடையே பாய்ந்தொளியை
கூட்டி ஏழையை மகிழ்த்திடுவாய்
அம்மா நாடுவாள் உன் தயவை
அழும் குழந்தைக்கு சோறூட்ட
கவிஞர் ரசிப்பார் உன்னழகை
கருத்துடன் கவிதை தேரோட்ட
அல்லியும் மலர்ந்திடும்
உனைக்கண்டு
சொல்லி முடியுமோ உன் பெருமை


**- சரஸ்வதி**






## இந்த இரு படங்களிலும் உள்ள வித்தியாசங்களைக் கண்டு பிடியுங்கள்





# விடையைச் சொல்லுங்கள்

1. ராகத்துடன் பாடி வருவார்;ராத்தூக்கம் கெடுப்பார். அவர் யார்?
2. காவி உடை அணியாத முனிவர்;கரை ஓரம் ஒற்றைக்காலில் தவம் செய்கிறார். அவர் யார்?
3. கருப்பு நிறத்துக்குச் சொந்தக்காரன்;கலகல பேச்சுக்காரன்;ஒருவருக்குத் துயர் என்றால் ஊரையே அழைப்பான்.அவன் யார்?
4. பறக்கும் இது பறவை இல்லை. ஆனால் இது அடையாளம் காட்டிக் கொடுத்து விடும். அது என்ன?
5. விழுந்தால் இது படுக்காது, நிமிர்ந்து எழுந்தால் நிற்காது .இது என்ன?
6. தாகம் போக்கும் தண்ணீர் இல்லை. களைப்பைப் போக்கும் மருந்தும் இல்லை. சண்டைக்குக் செல்லும் இது ஆயுதமும் இல்லை. இது என்ன?
7. நீந்தத் தெரியும் மீனில்லை; நடக்கத் தெரியும் மனிதனும் இல்லை; இறக்கை இருந்தும் பறக்காத பறவை நான் யார் தெரியுமா?
8. தொட்டால் மணக்கும்; கடித்தால் புளிக்கும். அறுத்துப் பிழிந்து தண்ணீர், சர்க்கரை சேர்த்து விட்டால் அடடா , சூப்பர் என்பார். யார் இது ?
9. முதுகில் சுமை தூக்கி முனங்காமல் வருவான்.மூச்சும் திணறாது.முகமும் கோணாது. அவன் யார்?
10. ஒன்பது பிள்ளையானாலும் ஒரே குடுமிதான் எங்களுக்கு. நாங்கள் யார்?

## விடைகள்

கொசு
2. கொக்கு.
3. காகம்.
4. கொடி.
5. தஞ்சாவூர் பொம்மை.
6. சோடா.
7. வாத்து
8. எலுமிச்சை.
9. நத்தை.
10. வெள்ளைப்பூண்டு.



# சிறுவர் உலகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சற்றிங் சாலையில்....

● தேசப்பிரியன்



காலை நேரம் பல்கலைக்கழக வாசலில் ஒரே கூட்டம். பஸ்ஸில் இருந்து இறங்கிய சங்கர் ஓட்டமும் நடையுமாக அவசரமாகப் போய்க் கொண்டிருந்தான். அவனை வாசலில் கண்டுவிட்டு ஓடி வந்த துசி "டேய் சங்கர் எங்க போறாய்... ஒப்படை (அசைன்மெண்ட்) கொடுக்கிறதுக்கோ, நில்லு நானும் வாறன்" அதுக்கு சங்கர்.. "இல்லையடாப்பா, சின்னப் பிரச்சினை ஒன்று, என்ர நண்பிகள் அவசரமாக வரச் சொல்லி போன் பண்ணிச்சினம் அதுதான் போறன்" "இன்று ஒப்படைக்கு இறுதி நாள் எல்லோ.. சரி சரி நீங்கள் போய் அவைக்கு விலக்குப் பிடியுங்கோ.. நான் ஒப்படை கொடுக்கப்போறன்" சங்கர் பல்கலைக்கழகம் வந்த புதிதில் அப்பாவியாகத்தான் தெரிந்தான். பின்னர் நாள்கள் போகப்போக நண்பிகளோடு சுற்றுவதும் அவர்களோடு கடலை ( அரட்டை) போடுவதும் காட்ஸ் விளையாடுவதும் என்று தன் பல்கலைக்கழகப் பொழுதை செலவு செய்ய ஆரம்பித்தான். அவன் தன் நண்பர்களைக் காணும் போதெல்லாம் தான் பழகும் ஒவ்வொரு பெண்ணைப் பற்றியும் அவர்களின் குணம், இயல்புகள், நடத்தைகள் என்று பலவாறு விபரிப்பான். அவர்களும் கேட்டு ரசித்து சிரிப்பார்கள். இது அவனோடு பழகும் பெண்களுக்கும் தெரியும். இருந்தும் அவர்களும் இவற்றைக் கண்டுகொள்வதில்லை. சில சந்தர்ப் பங்களில் மிக மட்டமாகக் கூடக் கதைப் பான். அதைக் கூட அவர்கள் பெரிது படுத்துவதில்லை. அதையே வேறு யாரும் செய்துவிட்டால் காவாலி, பொறுக்கி என்று திட்டுவார்கள், கோவிப் பார்கள். ஒருவேளை அவர்களும் அவனிடம் அதை விரும்பினமோ என்னவோ, சங்கர் அவர்களுக்கு மிக நெருக்கமானவனா கவே இருந்தான். ஒரு நாள் சங்கர் துசியிடம்.. "டேய் இவள் மதி பற்றி என்ன நினைக்கிறாய்" என்றான். "டேய் உனக்கே இது தகு மா.. எனக்குத்தான் பெரிசா அவைய ளோட பழக்கமில்லையே. பார்க்க அமைதியான நல்ல பிள்ளையாத்தான் தெரியுது. பழகிப் பார்த்தாத்தான் புரியும். நமக்கு அதுக்கெல்லாம் நேரமில்லை. ஏன் கேட்கிறாய் ஏதும் பிரச்சனையோ ??" என்று பதில் கேள்வியோடு முடித் தான் துசி. "ம்.. சின்னப் பிரச்சினை அவளை இங்க ஒரு பொடியன் விரும்புறான். இவளும் அவனோட நல்ல மாதிரித் தான். இப்ப சமீபத்தில அவர்களுக்குள் புதிசாக ஒரு பிரச்சினை தோன்றியிருக்கு. அதுதான் போன் பண்ணி என்னை அன்று வரச் சொன்னவள்" "ஓஓ அப்படியே.. அவைக்கு இப்படியான பிரச்சினை களுக்கும் நீங்களே அறிவுரை கொடுக்கிறேங்கள். நல்ல தொழில்தான் செய்யுங்கோ" என்று நக்கலாகப் பதில் கொடுத்தான் துசி. "டேய் துசி உனக்கு பெண்களைப் பிடிக்காது. அதால அலட்சியமாகப் பேசுறாய்.. அவர்களுக்கு எத்தனை பிரச்சினைகள் தெரியுமே சமூகத்தில்" அதற்கும் துசி.. "அப்படியே, தேவையில்லாமல் கண்டவை யோடு பழகிறது.. பழகி விட்டு பின்பு பழகின வையிலும், சமூகத்திலும் குறை சொல்லுங் கோ. சரி.. சரி .. ஏதோ பிரச்சினை எண் டாய்... அப்படி என்னதான் பிரச்சினை என்று சொல்லவேயில்லையே.."

"இல்லையடாப்பா.. மதி கொஞ்சம் நாகரீக மானவள். தெரியும் தானே. அவள் முகப் புத்தகத்தில் 'சற்றிங்' அது இதென்று ஜாலி யான பெண். இவன் கபிலன் இருக்கிறான் எல்லோ அவன் தான் இப்ப அவளோட நெருக்கம்" "அட இவன் கபிலனே.. அடப் பாவி அவனும் தொடங்கி விட்டானே" "எல்லாரும் உன்னை மாதிரி சாமியாரோ" உடனே துசி "சங்கர் சும்மா கதைக்காமல் விசயத்தைச் சொல்லு. எனக்கு வகுப்பு இருக்கு" இவள் மதி இன்னரநெற் சற்றிங் கில், பலரோடும் அவள் வஞ்சகமில்லாமல் கதைப்பாள்" உடனே துசி குறுக்கிட்டு "அதுசரி அவள் வஞ்சகம் இல்லாமல் தான் கதைக்கிறாள் என்றது எப்படி உனக்கு தெரியும். ஏதாவது கருவி வைச்சிருக் கிறியா கண்டுபிடிக்க" அதுக்கு சங்கர்.. "எல்லாம் பழகிப் பார்த்து வந்த ஒரு நம்பிக்கையில்தான்" "நான் உண்மை யாகவே கதைச்சுக்கொண்டு இருக்கிறேன். நீ நக்கலடிச்சுக் கொண்டே இருக்கிறாய்" "இல்லையடாப்பா நீங்களா தான் எல்லாம் சொல்லுறிங்கள். வஞ்சகம், சூதுவாது, நல்ல வன், கெட்டவன் என்று அதுதான் எப்படி அறியுறது என்று கேட்டன். சரி அதை விட்டிட்டு விசயத்தைக் கேளன்" அதற்கு துசி "..ம் சொல்லு கேட்பம்" "அவள் சற்றிங் போற இன்ரநெட் சற் கிளப்புக்கு ஒரு நாள் எதேச்சையாக கபிலனும் போயிருக்கி றான். அங்க ஒரே கூத்தும் கும்மாளமுமாம். ஆண்களும் பெண்களும் விடிய விடிய ஏதோ கதைக் கினமாம்" துசி மீண்டும் குறுக்கிட்டு "என்னடாப்பா சங்கர்.. விடிய விடிய அப்படி என்னதான் கதைக்கினம். உலக அரசியலோ.. இல்ல விஞ்ஞானக் கண்டுபிடிப்புகள் பற்றியோ.. இல்ல கதாப்பிரசங்கமோ வைக்கினம்" "பாத்தி யே மீண்டும் நக்கல் உனக்கு. அதுகள் சின்னஞ்சிறுசுகள். பலதும் பத்தும் கதைக்குங்கள்" "ஏண்டா.. சின்னஞ் சிறுசுகள் என்றால்.. பலதும் பத்தும் கதைக்குங்கள் என்றால், அப்ப அங்க வில்லங்கம் இருக்குது போல. சமீபத்தில் கேள்விப்பட்டன் சற்றிங்கில ஒரு பெண் தன்னை நடிகை அசின் என்று சொல்லி ஒருத்தனை ஏமாத்தினவள் என்று. அப்படி ஏதும் ஏடாகூடமா நடந்திட்டோ" "ம்.. நீ விசயத்துக்கு கிட்ட வந்திட்டா துசி.. கதையை கேளன்.. கபிலன் சற்றி ங் போன இடத்துக்கு மதியும் வழமை போல போயிருக்கிறாள். கபி லன் வேற பெயரில போனவனாம். மதியும் வேற பெயரில தானாம் இருந்தவள். இரண்டு பேரும் நல்லா கதைச்சிருக்கினம். கபிலன் படம் காட்டச் சொல்லி கேட்டிருக் கிறான். பெயர் விபரம் ரெலிபோன் நம்பர் எல்லாம் கேட்டிருக்கிறான். மதியும் எல்லாம் கொடுத்திருக்கிறாள். படமும் காட்டி இருக்கிறாள். உடன கபிலன் திகைச்சுப் போய் மதி நீயா என்று கேட்டு தான் கபிலன் என்று சொல்லி இருக்கிறான். சுமார் 4 - 5 மணி நேரம் சற்றிங்காம், அதிகாலை வர. தான் சற் பண்ணினது கபிலன் என்று அறிஞ்ச உடன மதி சற்றிங்க கட் பண்ணியிருக்கிறாள். இப்ப அதுதான் அவர்களுக்கள் பிரச்சினையாய்ப் போச்சுடாப்பா"

"பாத்தியோ சங்கர், இணையம் என்றது பனிப்போர் காலத்தில அமெரிக்க இராணுவ தகவல் பரிமாற்றத்துக்கு என்றிருந்தது. சோவியத் வீழ்ச்சிக்குப் பிறகு அதை தகவல் பரிமாற்றத்துக்கு என்று உலக வலைப் பின்னலாக வர்த்தக நோக்கத்துக்குப் பயன்படுத்த தொடங்கியதும் பல நன்மைகளோட தீமைகளும் வந்திருக்கு. அதிலும் இந்த சற்றிங் பல மணித்தியாலங்களை வீணே விழுங்கிறதோட சின்னஞ்சிறுசுகளில் இருந்து தாத்தாக்கள் வரை நல்ல விசயங்களை பகிர மட்டுமன்றி பெருமளவில வேண்டாத அலட்டல்களிலும் ஈடுபடவும் தூண்டுது. குறிப்பாக இளம் பெண்களும், ஆண்களும் இப்ப சற்றிங்கிலதான் அதிக நேரம் செலவிடுகினம். அதிகம் அறியாதவையோட வெளிப்படையாகவும் ரகசியமாகவும் பேசிக் கொள்ளுகின்றனர்" "அவர்கள் என்ன பேசினாலும் வெளி உலகுக்குத் தெரியாது என்பதால் எதுவும் அங்கு பேசப்படலாம். அவை அவர்களை உளவியல் ரீதியில் பாதிக்கவல்லனவாகக் கூட இருக்கலாம். அதனால் பல தீமைகளும் நடந்தேற வாய்ப்பிருக்கு. இது இப்படியே கட்டுப்பாடில்லாமல் கவனிப்பாரற்றுத் தொடர்ந்தால் பெரிய சமூகத் தாக்கம் ஒன்றை உலகம் எதிர்கொள்ள வேண்டி இருக்கும். மேற்குலகத்தைப் பொறுத்தவரை அவைக்கு இது ஒன்றும் புதிதல்ல. ஆனால் நாங்கள் இந்தச் சுதந்திர சற்றிங் கருத்துப் பரிமாற்றம் பற்றி கவனமாக இருக்க வேண்டும். குறிப்பாக சிறுவர், சிறுமியர், இளம் ஆண்கள், பெண்கள் தொடர்பில் இந்த சற்றிங்கில் யாரோட என்ன கருத்துப் பரிமாற்றம் செய்யினம் என்பதில் குடும்பத்தில் உள்ள பெரியவர் கள் மற்றும் பொறுப்புவாய்ந்தவர்கள் கூடிய கவனம் எடுக்க வேண்டும். இல்லாட்டி கபிலன் - மதிக் கிடையில் தோன்றியது போல சின்னச்சின்ன பிரச்சினைகளில இருந்து பெரிய குழப்பங்கள் வரை குடும்பத்தில், சமூகத்தில் ,நாட்டில் வர வாய்ப்பிருக்கு" "ம்ம்... நீ சொல்லுறது சரி தாண்டா துசி. எப்படித்தான் இதைக் கட்டுப்படுத்த வெளிக்கிட்டாலும் அரட்டைக்கு பழகினவையை கட்டுப்படுத்திறது கொஞ்சம் கஸ்டம் தான்" "என்ன சங்கர் அனுபவம் பேசுதோ" "இல்லையடா துசி.. இது விடயத்தில கட்டுப்பாடுகளைக் கொண்டு வர, தாங்கள் சுதந்திரமாகக் கதைக்கிறதை தடுக்கினம், தங்கள் நோக்கங்களைச் சந்தேகிக்கினம் என்று வேற வடிவத்தில் பிரச்சினை திசை மாறிட வாய்ப்பிருக்கு எல்லோ. எனவே எல்லோரும் அவையாக நிலைமைகளைப் புரிந்துணர்ந்து தேவையற்ற சற்றிங்கில ஈடுபடுறதைத் தவிர்த்தால்த் தான் இப்படியான அநாவசிய முரண்பாடுகளை, தனி நபர், குடும்ப, சமூகப் பிரச்சினைகளைத் தவிர்க்கலாம். முன் பின் அறியாத கண்டவையோடும் தனிப்பட்ட முறையில் வீணே கண்டதையும் கதைச்சு, தனிப்பட்ட தகவல்களை பரிமாறப் போய் ஏன் வில்லங்கத்தை வலிய விலைக்கு வாங்க வேணும் சொல்லு பாப்பம். உண்மைதான் சங்கர் நீயே சொல்லிட்டாய், இதில நான் என்ன சொல்ல இருக்கு. சம்பந்தப்பட்டவை கேட்டு அவதானமா நடந்து கொண்டாச் சரி. இப்ப எனக்கு வகுப்புக்கு நேரமாச்சு போயிட்டு வாறன். என்று கூறி நண்பர்கள் இருவரும் விடைபெற்றுக்கொண்டனர்..!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகைப்.....

(08 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வெள்ளம், புயல் போன்றவை சில பகுதிகளிலும் பஞ்சம், காட்டுத்தீ போன்றவை சில பகுதிகளிலும் நிகழ்ந்தது. ஆயிரம் ஆண்டுகாலத்தின் பெரும் பேரழிவாக இது கருதப்படுகிறது.

1997-1998ஆம் ஆண்டு 'எல் நினோ' நிகழப்போவதை முன்கூட்டியே நம்மால் கணிக்க முடிந்தது என்றாலும், உலகம் முழுவதும் ஏற்பட்ட 2000க்கும் மேற்பட்ட உயிரிழப்பை தடுக்க முடியவில்லை.

9. 'எல் நினோ' நிகழ்வால் உலகின் பல பகுதிகளில் பெரு மழை, வறட்சி போன்றவை நிலவி பெரும் சேதத்தை ஏற்படுத்தினாலும் 'எல் நினோ' நிகழ்வால் சில நன்மைகளும் இருக்கின்றன. வளி மண்டலத்தின் உயரத்தில் வேகமாக கிழக்கு நோக்கி வீசும் ஜெட் காற்றோட்டங்கள்' இக்காலப் பகுதியில் பெரும்பாலான புயல்களை வழி நடத்துவதாக இருக்கின்றன.

'எல் நினோ' நிகழ்வால் இந்த ஜெட் காற்றோட்டங்கள் மாற்றம் பெறுகின்றன. இதனால் பெரும் புயல்கள் வலுவிழக்கின்றன. சில பகுதிகளில் வானிலை மாற்றங்களில் நல்ல விளைவை ஏற்படுத்துகின்றன.

10. 'எல் நினோ' நிகழ்விற்கு அப்படியே எதிர்மாறானது 'லா நினா' ஆகும். 'எல் நினோ' எவ்வாறு 'சிறுவன்' எனப் பொருள் கொண்டதோ அதே போல 'லா நினா' என்றால் 'சிறுமி' என்று பொருள் ஆகும். 'லா நினா' நிகழ்வால் தென் அமெரிக்க கடல் பகுதியில் வழக்கத்துக்கு மாறாக அதிக வறட்சியும் குளிர்ச்சியும் ஒருங்கே நிகழும். மேற்கு பசுபிக் கடல் பகுதி மிதவெப்பமாகவும் அதிக ஈரப்பதமும் மற்றும் அதிக மழையும் இருக்கும்.

பொதுவாக 'எல் நினோ' வை அடுத்து 'லா நினா' நிகழும். ஆனால், எல்லா நேரங்களில் சிறுவனை அடுத்து சிறுமி வரமாட்டாள்.

# வீரம் செறிந்த.....

( 09 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வின் எதிரியாக சதாம் ஹுசைன் மாறிய வேளை அமெரிக்கா ஈராக்கிய குர்திய தேசியவாதிகளை சதாம் ஹுசைனுக்கு எதிராகப் பாவித்தது.

இன்று ஈராக்கில் அமெரிக்காவின் அதி நம்பகமான நட்புச் சக்தியாக உள்ள குர்திய தேசிய வாதிகள், அமெரிக்க ஆதரவுடன் தனிநாட்டைப் பெறலாம் என இன்னமும் நம்புகிறார்கள்.

அவர்கள் குர்துகளை ஒடுக்கும் துருக்கிய அரசுடன் ஒத்துழைக்கிறார்கள்.

துருக்கி அரசுடன் நடந்த பேச்சுக்கள் பயனளிக்காததால் பி.கே.கே. மீண்டும் ஆயுதமேந்திப் போராடுவதற்கு விழைந்தது. ஈராக் மீதான அமெரிக்கப் போர் இப் போராட்டத்துக்குப் புதிய வடிவைக் கொடுத்தது.

இன்று குர்திய மக்களின் விடுதலையில் மட்டுமன்றி அவர்களது இருப்பிலும் அடிப்படை அம்சமாக பி.கே.கே. அமைந்துள்ளது.

துருக்கிய கம்யூனிஸ்ற்றுக்களை எதிர்ப்பவர்களாகத் தொடங்கிப் போராட்ட அனுபவத்தின் விளைவாக அவர்களுடைய நட்புச் சக்தியாகிய பி.கே.கே துருக்கியில் ஜனநாயகத்துக்கும் மனித உரிமைகளுக்கும் ஏகாதிபத்திய எதிர்ப்புக்குமான போராட்ட அணியில் ஓர் அங்கமாகவும் குர்திய மக்களின் சுய நிர்ணயத்துக்கும் சமூக விடுதலைக்குமான ஒரு போராட்டச் சக்தியுமாகியது.

அமெரிக்க ஏகாதிபத்தியத்தைத் தீவிரமாக எதிர்க்கும் ஒரு விடுதலை இயக்கமான பி.கே.கே. சென்ற நூற்றாண்டின் இறுதியில் முடிந்து விட்டது எனப் பலர் நினைத்தனர்; பெரும்பாலோர் அதையிட்டு மகிழ்ந்தனர்.

பி.கே.கேயின் மீள் எழுச்சி ஒடுக்கப்படும் சமூகங்களுக்கான ஒரு வழிகாட்டியாயுள்ள அதே வேளை, ஒடுக்கப்படும் சமூகங்களின் தேசியவாதிகள் ஒடுக்குமுறையாளர்களுடனும் வல்லரசுகளுடன் இணங்கிப் போகக்கூடும் என்பதற்கும் குர்தியப் போராட்டம் நல்லதொரு உதாரணமாகும்.

இன்று குர்தியப் போராட்டம் பல முனைகளில் சவால்களை எதிர்நோக்குகிறது. ஒருபுறம் துருக்கி இராணுவம் பி.கே.கே. போராளிகளைக் குறிவைத்துத் தாக்குகிறது.

அமெரிக்காவும் மேற்குலகும் அதற்கு ஆதரவு வழங்குகின்றன. மறுபுறம் ஐ.எஸ். பயங்கரவாதிகள் குர்து மக்களுக்கெதிராக வன்முறையைக் கட்டவிழ்த்துள்ளார்கள்.

துருக்கி இராணுவமும் ஐ.எஸ். பயங்கரவாதிகளும் பெண்களைக் குறிவைக்கத் தொடங்கினர். குர்தியப் பகுதிகளைத் தாக்கி அங்கிருக்கும் பெண்களை வன்கலவிக்கு உள்ளாக்குவதும் பாலியல் அடிமைகளாகப் பாவிப்பதும்



பெண்களை விற்பதும் போன்ற கொடுமைகள் தொடர்ந்து இடம்பெற்றன. பி.கே.கேக்கு எதிரான யுத்தத்தில் பெண்கள் இலக்குகளாயினர்.

இந்த நிலையில், 2012இல் பி.கே.கே. பெண்கள் பாதுகாப்புப் படைகளை உருவாக்கியது. தனது கட்டுப்பாட்டுப் பகுதியின் பாதுகாப்பை உறுதிப்படுத்தப் பெண்களை ஆயுதபாணியாக்கினர்.

ஐ.எஸ்ஸின் அளவுகடந்த அட்டூழியங்களின் விளைவாகப், பெண்கள் அமைப்பு காலப்போக்கில் ஓர் இராணுவமாக வளர்ந்தது.

இன்று, பி.கே.கேயின் முக்கிய போரிடும் படைப்பிரிவாக இப் பெண் போராளிகள் உள்ளனர். தற்போது, ஆயுதப் பயிற்சி பெற்ற பெண் போராளிகள் கிட்டத்தட்ட 10,000 பேர் உள்ளனர்.

ஆணைப் பெண்ணுக்கு மேலாகக் கருதுகின்ற, ஆண்-பெண் சமத்துவமற்ற மத்திய கிழக்குச் சூழலில் இப் பெண் போராளிகள் பண்பாட்டு ரீதியாகவும் சமூக ரீதியிலும் அராபிய - இஸ்லாமிய வாதச் சிந்தனையில் பாரிய நெருக்கடியை உருவாக்கியுள்ளார்கள்.

பல்லாயிரம் ஆண்டுகளாகப் பெண் பற்றிப் புனைந்த கற்பிதங்கள் அனைத்தையும், இப்பெண்கள் இராணுவச் சீருடையில் ஆயுதங்களை ஏந்திக் களமாடுவது உடைத்தெறிகிறது.

மத்திய கிழக்குச் சமூகம் ஒரு புறம் இதை ஏற்க மறுக்கிறது.

பெண் பற்றிய படிமத்தையே இந்த வீர மகளிர் மாற்றுகிறார்கள்.

அந்த வகையிற் பாலியல் சமத்துவத்துக்கான புரட்சி நடவடிக்கையாக இதைக் கொள்ளலாம். ஆனால் இன்று மத்திய கிழக்கிற் பலரது கேள்வியாக உள்ளது யாதெனில் இப் பெண்கள் ஆயுதம் ஏந்தத் தேவை என்ன?' என்பதே.

குர்துப் பெண்களுக்கு வேறு வழியில்லை. தங்களைத் தற்காப்பதோடு தங்கள் குடும்பங்களையும் தற்காக்கும் கட்டாயம் அவர்களுடையது.

பல்கலைக்கழகங்கன்றிப் பாடசாலைகளே இல்லாது அன்றாட வாழ்வாதாரத்துக்கே போராடுவோர் மீது, தொடர்ச்சியான வன்முறையைப் பல்வேறு தரப்புக்கள் ஏவும்போது அவர்களுக்குப் போராடுவதைத் தவிர தெரிவு வேறில்லை.

மறுபுறம், மேற்குலக ஊடகங்கள் வீரமாகப் போராடும் பெண்களில் அழகானவர்களைப் படம் எடுத்துக் கிளுகிளுப்பூட்டுமாறு வெளியிட்டு வீரஞ் செறிந்த அப் போராட்டத்தைக் கொச்சைப்படுத்துகின்றன.

குர்து மொழியில் 'ரொஜாவா' எனப்படும் மேற்கு சிரியக் குர்திஸ்தான் பகுதியின் முழுக் கட்டுப்பாடும் பெண்களிடமே உள்ளது. அவர்கள் தான் அரசியலையும் நிர்வாகத்தையும் நடத்திக் காவல் காக்கிறார்கள், போராடுகிறார்கள்.

ஐ.எஸ்ஸில் இணையும் பலர் கலீபாத்தை அடைவதற்கான புனிதப் போரில் பங்குபற்றி மரித்தால் சொர்க்கம் நிச்சயம் என்று நம்புகிறார்கள்.

இந்த நம்பிக்கையே உலகின் பலபாகங்களில் உள்ள முஸ்லிம் இளைஞர்களை ஐ.எஸ்ஸில் இணையத் தூண்டுகிறது. ஐ.எஸ்ஸைப் பொறுத்தவரை, பெண்கள், ஆண்களை மகிழ்விக்கவும் குழந்தை பெறவும் வீட்டு வேலைகளைச் செய்யவும் மட்டுமே தகுந்தவர்கள்.

பெண்களுடன் போரிட்டு இறந்தால் சொர்க்கம் கிடைக்காது, நரகமே கிடைக்கும் என அவர்கள் நம்புகிறார்கள். எனவே குர்தியப் பெண் போராளிகளுடன் போரிட அவர்கள் தயங்குகின்றனர்.

மேலும் போர்க்களத்தில் மிக வீரமாகத் தளராது போர்புரியும் குர்துப் பெண் போராளிகளின் இயல்பையும் ஐ.எஸ். போராளிகள் அறிவர். அதனாலும் ஐ.எஸ். பயங்கரவாதிகள் அவர்களைக் கண்டு அஞ்சுகிறார்கள்

கடந்த ஆண்டு பி.கே.கே. கட்டுப்பாட்டில் உள்ள கொபானி நகரை ஐ.எஸ். பயங்கரவாதிகள் கைப்பற்றியபோது, பி.கே.கேயின் பெண் போராளிகள் அவர்களை அங்கிருந்து விரட்ட முக்கிய பங்காற்றினர். இப் பெண் போராளிகள் கொபானி முற்றுகையை முறியடித்தமை அவர்களின் வீரத்தின் சான்றாக இன்றுவரை திகழ்கிறது.

இந்த விடுதலை மகளிர் இப்போது குர்து விடுதலைப் போராட்டத்தின் சின்னமாக உள்ளார்கள். அது சமத்துவத்தின் சின்னம் மட்டுமன்றி வீரஞ் செறிந்த மக்கள் போராட்ட மரபின் வெற்றியின் சின்னமுமாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை கொழும்பு - 6, வெள்ளவத்தை, பெரகும்பா பிளேஸ், 1/5 ஆம் இலக்கத்தில் உள்ள லாண்ட் மார்க் என்டர் பிறைஸ் ஸ்தாபனத்தால், 2015 டிசம்பர் 30ஆம் திகதி வெளியிடப்பட்டது.